பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை06 வெள்ளிக்கிழமை (21.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 357

# புலிகளை அழிக்கப் போரும் தமிழருக்கு அரசியல் தீர்வும்

## சமாந்தரமாக நடப்பதாகச் சொல்கிறார் அமைச்சர்

கொழும்பு, நவம்பர் 21

"ஒருபுறம் புலிகளை இல்லாதொழிக்க யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. அதேநேரம், மறுபுறம் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கும் நடவடிக்கையும் சமாந்தரமாக நடைபெறுகிறது" என்று ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

மேற்படி இரு நடவடிக்கைகளையும் ஒரே நேரத்தில் முடிப்பதே அரசின் திட்டம் எனவும் அவர் கூறினார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இடைநிறுத்தம்

திருகோணமலை, நவ.21

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

காலநிலை சீரில்லாத காரணத்தால்,

(16ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணத்துக்கு 24 மணி நேர மின்சாரம்

கொழும்பு, நவ. 21

அடுத்த மாதம் முதல் யாழ்ப்பாணத்திற்கு 24 மணி நேர மின்சாரம் வழங்கப்படும் என்று மின்சக்தி அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

நேற்று நாடாளுமன்றில் இடம்பெற்ற 2009 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தின் மின்சக்தி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய

(16ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையில் போர் நிறுத்தம் சாத்தியமில்லை என்று கூறியதை ஆட்சேபித்து

## திருவாரூர் சென்ற ரணிலை மறித்து கம்யூனிஸ்ட் தொண்டர்கள் கலாட்டா!

சென்னை, நவ.21

சென்னையில் திருவாரூர் பகுதியில்விஜயம் செய்து கொண்டிருந்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நூற்றுக்கணக்கான இந்திய கம்யூனிஸ்ட் தொண்டர்கள் இடைமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கலாட்டா செய்தனர்.

இலங்கையில் போர் நிறுத்தம் சாத்தியமில்லை என்று கருத்து தெரிவித்த ரணிலுக்கு எதிராகக் கோஷமிட்ட தொண்டர்கள், அவரது காரைச் சுற்றிவளைத்தனர்.

நேற்றுக்காலை சென்னை

(16ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகள் விடுதலை தொடர்பாக கூட்டமைப்பு சட்டமா அதிபர் சந்திப்பு

கொழும்பு, நவ. 21

தென்பகுதி சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 1,200 தமிழ்க் கைதிகள் மீதான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், சட்டமா அதிபர் ரி.ஆர்.டி.சில்வாவிடம் நேரில் கோரியுள்ளனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சீரணி அம்மன் ஆலயத்தில் கைதானோரில் ஐவரை நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 21

சீரணி நாகபூசணி அம்மன் ஆலயத்தில் வைத்து கைது செய்யப்பட்ட ஏழு பேரில் ஐவரை இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு பொலிஸாருக்கு மல்லாகம் நீதிவான் ரி.பிரபாகரன் உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி ஆலயத்தில் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஆலயத்தின் குருக்கள் இருவர், நிர்வாகசபைத் தலைவர் உட்பட மூன்று நிர்வாகிகள், இரண்டு பக்தர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் குருக்களில் ஒருவர், பக்தர்கள் இருவர், நிர்வாகிகள் இருவர் என ஐவரை இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய் யுமாறு பொலிஸாருக்கு உத்தரவு வழங் கப் பட்டுள்ளது.இது தொடர்பான வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் ரி.பிரபாகரன் முன் எடுக் கபட்ட போதே இந்த உத்தரவு வழங்கப் பட்டுள்ளது.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய இவர்கள் இன்று விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-1)

## ஐந்து தமிழ் இளைஞர்கள் நேற்று விடுவிப்பு

கொழும்பு, நவ. 21

இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து தமிழ் இளைஞர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பு பதில் பிரதம நீதிவான் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

திருஞானசம்பந்தர் ரமணன் (வயது - 20- இணுவில்), பாஸ்கரன் பிரதாப் (வயது - 21

(16ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை, கிளாலி முன்னரங்க நிலைகளை தாம் மீட்டுவிட்டதாக படையினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

முகமாலை மற்றும் கிளாலி பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளின் முதலாவது தொகுதி முன்னரங்க நிலைகளை இராணுவத்தினர் நேற்று வியாழக்கிழமை கைப்பற்றியுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளிலுள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையை இராணுவத்தின் 53 மற்றும் 55 ஆவது படைப்பிரிவினர் கடந்த சனிக்கிழமை ஆரம்பித்தனர்.

இதனைத்தொடர்ந்து இடம்பெற்ற கடும் மோதல்களின் பின்னர் இப்பகுதியை இராணுவத்தினர் கைப்பற்றினர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

"800 மீற்றர் நீளமும் எட்டு கிலோ மீற்றர் அகலமும் கொண்ட விடுதலைப் புலிகளின் நிலைகளே கைப்பற்றப்பட்டுள்ளன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பாணின் விலை குறையும்

யாழ்ப்பாணம், நவ, 21

குடாநாட்டில் பாண் மற்றும் பணிஸ் போன்ற பொருள்களின் விலைகள் குறைக்கப்படவுள்ளன. கோதுமைமாவின் விலை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் குறைக்கப்படுவதை யடுத்தே பாணின் விலையையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

பேக்கறி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி விலைகளை குறைக்கவிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## வன்னி அகதிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவி வழங்கும்

### இந்தியத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.21

வன்னியில் காணப்படும் நிலைமையை மதிப்பிட்டு இந்தியா எதிர்காலத்திலும் அந்தப்பகுதி மக்களுக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை வழங்கும் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத் உறுதியளித்துள்ளார்.

இந்தியாவால் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிப் பொருள்களை செஞ்சிலுவை சர்வதேசக்குழுவிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

கல்விச் சுடர் உள்ளே
க.பொ.த.ப(சா) பரீட்சை
★ தமிழ்மொழியும் இலக்கியமும் 1

## யாழ்.ஆஸ்பத்திரியில் போலிஸ் பாதுகாப்பு பார்வையாளர் அ.அட்டையுடன் செல்ல வேண்டும்

### தென்னிலங்கை டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் தென்னிலங்கை டாக்டர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் வைத்தியசாலையில் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, நாவற்காடு ஆஸ்பத்திரியில் பணியாற்றிய டாக்டர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து, யாழ்.வைத்தியசாலையில்

## முதலாம் திகதி சென்னையில் தமிழீழ அங்கீகார மாநாடு

### விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஏற்பாட்டில்

சென்னை, நவ. 21

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் ஏற்பாட்டில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி சென்னையில் தமிழீழ அங்கீகார மாநாடு நடைபெறவிருக்கின்றது.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**University of Jaffna, Sri Lanka**
**Panel of Attorneys at Law**

Applications are invited by me up to 19th December 2008 from Attorneys at Law to constitute a Panel of Attorneys at Law to execute surety bonds and to attend other legal matters pertaining to our University.

Those who are intended to apply are requested to furnish the following details.

1. Full Name :
2. Address :
3. Contact Telephone Nunber :
4. Experience in Court works, legal work relating to corporations/companies and drafting legal documents.

ACTING REGISTRAR
2008.11.20.


## பாஷாண உத்வாசன சபிண்டீகரண அழைப்பு



எமது தந்தையார்
சிவஸ்ரீ வல்லிபுரம் ஐயர்
வேலுப்பிள்ளை குருக்கள்
சர்வதாரி வருடம் ஐப்பசி 25ஆம் நாள் 10.11.2008 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.
இன்று (21.11.2008) வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் கல்லெடுப்பு நடைபெற்று தொடர்ந்து சிரார்த்தமும் சபிண்டீகரணமும் நடைபெறும். மேற்படி கிரியைகளிலும் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வே.தியானந்தராசக் குருக்கள்,
கிளி ஐயா,
"சிவபுரம்"
நெல்லண்டை, தும்பளை,
பருத்தித்துறை.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.
T.P.021 226 3157

(ஐ/555396)

## தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ.21

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்பட்டுவரும் கல்விமாணிப் பட்டநெறி முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி பரீட்சை நிலையத்தில் ஆரம்பமாகின்றன.

இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அவர்களது சொந்த முகவரிக்கு தேசிய கல்வி நிறுவகத்தால் அனுப்பப்பட்டுள்ளன.

இதுவரை அனுமதி அட்டை கிடைக்காதவர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப்பட்டநெறி இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதுவரை பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் 021 222 3584 அல்லது 0779143187 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விவரங்களைத் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

(1)

## தவறிவிட்டது

தெய்வேந்திரம் வினோத் என்பவரது தே.அ.அ. (882103110V) கல்வியங்காட்டு சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவும்.

சி.தெய்வேந்திரம்
74/1, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (80056)

## தவறிவிட்டது

09.01.700982 இலக்கமுடைய சி.திருநாவுக்கரசு என்பவருடைய ஓய்வூதிய அடையாள அட்டை சுமார் ஒரு வாரத்திற்கு முன்பதாக ஸ்ரான்லிக் கல்லூரி வீதி ஒழுங்கை, அரியாலைக்கும் - நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் இடையே தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தோர் கடிதம் மூலமாகவோ நேரடியாகவோ இல.3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி, அரியாலை எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தகவல்: சி.திருநாவுக்கரசு.

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி வகுப்புக்கள்

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் புதிய மத்தியஸ்தர்களை தெரிவு செய்வதற்கான பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளது.

இந்த பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விருப்புபவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் 'ந.சுதேஸ்குமார், செயலாளர், வ.மா.க.ம.ச., இல. 47, அரசடி வீதி, சங்கானை' என்ற முகவரிக்கு கடிதமூலம் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கடந்த 22.10.2008 அன்று சிவபேறு அடைந்த எமது ஆருயிர்ச்
செல்வம் துஷாரா
அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்து நேரடியாக வருகை தந்து, அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், மற்றும் தொலைபேசி மூலமாகவும், தந்திமூலமாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் எமது செல்வம் உடல் நலம் குன்றியிருந்தவேளை சகல உதவிகளையும் வழங்கிய யாழ்.போதனா வைத்தியசாலை குழந்தைநல மருத்துவ நிபுணர், ஏனைய வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல.14 பொற்பதி வீதி,
கொக்குவில். (79997)

சுதாகர் தனுசியா
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### காசிலிங்கம் இந்திரதேவன்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கோயிலாக் கண்டியை வதிவிடமாகவும் கொண்ட கணக்காளர் காசிலிங்கம் இந்திரதேவன் நேற்று (20.11.2008) வியாழக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற காசிலிங்கம் - புஸ்பலீலா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற V.S.கந்தையா (இளைப்பாறிய அதிபர்) - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் செந்தில்சோதியின் அன்புக் கணவரும், சகாதேவன் (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற பாலதேவன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) மற்றும் லயன் சற்குணதேவன் (சமாதான நீதிவான்), காலஞ்சென்ற ஜெயதேவன் (உத்தியோகத்தர் HNB) ஆகியோரின் அன்புச் சகோதரரும் டாக்டர் செந்தில்நாதன் (கனடா), செந்தில்ராணி (அதிபர், யா/கோயிலாக்கண்டி மகாலட்சுமி வித்தி.) செந்தில்மணி, செந்தில்குமார் (சுவிஸ்), செந்தில்குமாரி (கனடா), செந்தில்சேயோன்(கனடா), செந்தில்ராஜன் (சுவிஸ்), செந்தில்செல்வி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நேற்று மாலை அவரின் இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கோயிலாக்கண்டி,
கைதடி. (80053)
திருமதி இ.செந்தில்சோதி (மனைவி),
லயன் கா.சற்குணதேவன் (சகோதரர்).

### திருமதி சிவகாமிப்பிள்ளை இராசேந்திரம்



ஓவசியர் ஒழுங்கை, தெல்லிப்பழை கிழக்கை பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகாமிப்பிள்ளை இராசேந்திரம் நேற்று (20.11.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நடராசா இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அன்னலட்சுமி, செல்வநாயகி மற்றும் வரதலட்சுமி, செல்லம்மா, கனகநாயகி ஆகியோரின் மைத்துனியும், துரைசிங்கம் (கனடா), அம்பிகாதேவி (கொழும்பு), விசாகப்பெருமாள் (கொழும்பு), சறோஜாதேவி (கொழும்பு), இராசமலர் (கொழும்பு), கதிர்காமநாதன் (கொழும்பு), விமலநாதன் (சுவிஸ்), கலாநிதி (கொழும்பு), இராசநாயகி, இராசசெல்வி, இராசசௌந்தரி, இந்திரஜிற், இந்திரமாலா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2008) வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அம்பலவாணர் வீதி, உடுவிலில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மருதனார் மடம் பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அம்பலவாணர் வீதி,
உடுவில்.
திருமதி இராசசெல்வி தவராசா
(மருமகள்).

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### சிவசுப்பிரமணியம் பானுருபன் (ரூபன்)

தாயின் மடியில்
10.11.1981

மண்ணின் மடியில்
21.11.2005

நீ எம்மைவிட்டு பிரிந்து
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உன் முகம் எம்முன்னே நிற்குதய்யா -
ரூபா
என்றும் எம் இதயங்களில் நீர் வாழ்வீர்

உன்பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அண்ணை,
அக்கா, தம்பி, ...

மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய்.

## முதலாம் வருட நினைவில் ...



பிறப்பு
02.01.1957

இறப்பு
21.11.2007

அமரர் வேலுப்பிள்ளை
சபாபதிப்பிள்ளை
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்)

தூங்கிய எங்களைத் துயில் எழுப்பிவிட்டு
நீங்கள் மட்டும் ஏனப்பா நீண்ட துயில்
ஆண்டொன்று ஆனது நம்பமுடியவில்லை
எங்களைத் தழுவிட ஏனின்னும் வரவில்லை
உற்றார், உறவினர் அனைவரின் நினைவிலும்
நீங்காமல் நிற்கும் உங்களை நினைத்திடுவோம்.

இடைக்குறிச்சி, வரணி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர் பிரதிநிதித்துவத்தை அசிங்கப்படுத்தும் முயற்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, பி. அரியநேத்திரன், எஸ். கஜேந்திரன் ஆகிய மூவரும் பயங்கரவாத விசாரணைப்பிரிவுப் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த மூவரும் வெளிநாடுகளில் ஆற்றியவை எனக் கூறப்படும் உரைகள் தொடர்பாகவே பொலிஸாரால் குடையப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியம், 'பயங்கரவாதச் செயற்பாடுகளை' நியாயப்படுத்தல் ஆகியவை குறித்தும், இலங்கை, இலங்கை அரசு, இலங்கைப் படைகள் ஆகிய தரப்புகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்திலும் அவர்கள் உரையாற்றியுள்ளனர் எனத் தெரிவித்து, அதன் அடிப்படையிலேயே அவர்கள் நோண்டப்பட்டிருக்கின்றார்கள்.

1983 ஜூலைக் கலவரத்தை அடுத்து, அப்போதைய ஜெயவர்த்தனா அரசினால் - தமிழர் தரப்பின் சம்பந்தம் ஏதுமின்றி ஒருதலைப்பட்சமாக - கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தின் ஷரத்துக்களையே இப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் மீது ஏவிவிட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்பது வெளிப்படை.

1983 ஜூலைக் கலவரம் ஈழத் தமிழர்கள் மீது பௌத்த - சிங்களப் பேரினவாதத்தால் திட்டமிடப்பட்ட முறையில் ஏவிவிடப்பட்டது என்பது பகிரங்க இரகசியம்.

இந்தக் கொடூரத்தின் தவறுக்கான பொறுப்பைத் திசைதிருப்பிவிடுவதற்காக அரசமைப்பின் ஆறாவது திருத்தம் பேரினவாதத்தினால் நாடாளுமன்றுக்கு அப்போது அவசர அவசரமாகக் கொண்டுவரப்பட்டது.

அத்திருத்தத்தின்படி -

இலங்கையர் எவரும் நாட்டுக்குள்ளேயோ, வெளியேயோ பிரிவினைக்கு ஆதரவாகச் செயற்படக்கூடாது; பிரிவினையை ஆதரித்துப் பேசவோ, பிரசாரம் செய்யவோ இயலாது.

பௌத்த - சிங்களத் தரப்பால் ஒருதலைப்பட்சமாகக் கொண்டுவரப்பட்ட இந்த சட்டவிதியால் அப்போது நாடாளுமன்றத்தில் இருந்த தமிழர் விடுதலைக் கூட் டணியின் 17 எம். பிக்களும் தமது பதவியை உறுதிப் படுத்தும் விதத்தில் புதிய சத்தியப்பிரமாணத்தைச் செய்ய இயலாமல் போனது. அதனால் அவர்கள் பதவி இழந்தனர். அந்தப் பதினேழு எம்.பிக்களின் ஆதரவால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை முதன்முதலாகப் பெற்றிருந்த ஒரேயொரு தமிழரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் அந்தப் பதவியை இதனால் இழக்கவேண்டியவரானார்.

கொள்கைப் பிடிப்புக் காரணமாகத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் - தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பிக்கள் - இவ்வாறு தமது பதவியை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

அப்போது தமிழர் தரப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக்கூட, தமது அறுதிப் பெரும்பான்மையைக் கொண்ட நாடாளுமன்றப்பலம் மூலம் சிங்கள ஆட்சிப் பீடம் இல்லாமல் செய்யவைக்க -

வேறு வழியின்றி ஈழத் தமிழர்களின் முழுப் பார்வையும், சிந்தனையும் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தின்பால் முழு அளவில் திரும்பியது.

ஜனநாயக வழியில் தெரிவான தமிழர்களின் பிரதி நிதித்துவத்தைச் சிதறடிக்க வைத்ததன்மூலம், ஈழத் தமிழர்கள் மத்தியில் விடுதலைக்கான ஆயுதப் போராட் டத் தீ முழு அளவில் விளாசி எரிவதற்கு வழி செய்தது அன்றைய அரசு.

இப்போதும் அதைப் போன்ற முட்டாள்தன நடவடிக்கைகளே கட்டவிழ்கின்றன என்பதை உய்த்துணரக் கூடியதாக இருக்கின்றது.

ஈழத் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளுக்கு 'புலிகளின் ஏவலர்கள்' என்ற பட்டம் சூட்டி, அடையாளப்படுத்தி, எம்.பி. பதவிகளில் இருந்து அவர்களை வெளியேற்றுவதற்கு எத்தனங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிகின்றது.

பிரிவினைக்கு எதிரான அரசமைப்பின் 6 ஆவது சட்டத்திருத்தம் -

பயங்கரவாத தடுப்புச் சட்டம் -

அவசரகாலச்சட்ட விதிகளின் கீழான ஒழுங்குகள் மற்றும் ஏற்பாடுகள் -

போன்றவை 'தமிழ்த் தேசியம்' குறித்து சிரத்தை கொண்ட அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள், பிரமுகர்கள் போன்றோர் மீது இலகுவாகப் பாயத் தயாராகி வருகின்றன என்று அரசியல் கள நிலைவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்த் தேசியம் குறித்துக் குரல் எழுப்புகின்ற அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் போன்றவர்களின் கருத்து நிலைப்பாட்டை ஒலிக்கவிடாமல் அமுக்குவதன் மூலம் தமிழர்களின் உரிமைக்கான எழுச்சியை அடக்கி, அவர்களை நிரந்தர அடிமைகளாக்கி, ஆளலாம் எனச் சிங்களம் சிந்திக்கின்றது.

அதற்குக் கட்டியம் கூறுவது போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு எதிராக, பயங்கரவாத விசாரணைப் பிரிவுப் பொலிஸார் மேற்கொள்ளும் கெடுபிடிகள் அமைந்திருக்கின்றன.

தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் எழுப்பும் எம்.பிக்களை கம்பிகளுக்குப் பின்னால் நிறுத்தி, அவர்களை அச்சுறுத்தி, அவர்களின் எம்.பி. பதவிகளைப் பறிப்பதன் மூலம், தமிழர்கள் மத்தியில் ஒட்டுக் குழுக்களையும், துணைப்படைகளையும் நிலைநிறுத்தி, தமது ஏவலர்களான அந்த அணிகளின் தலைவர்களைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக வெளிப்படுத்தும் 'குயுக்தித்தனமே' இப்போது இங்கு இடம்பெறுகின்றது.

இதன் பெறுபேறு நாட்டில் பல விபரீத விளைவுகளுக்கு வழிகோலும்.

# பிரித்தானிய நாடாளுமன்றம் முன்பாக நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம்

## ஆயிரக்காணக்கான தமிழர்கள் திரண்டனர்

லண்டன், நவ.21

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்பாகவுள்ள நாடாளுமன்ற சதுக்கத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்றுள்ளனர்.

நாடாளுமன்ற சதுக்கத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இக்கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இதில் பிரித்தானியாவில் உள்ள சில அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் பங்கேற்றனர்.

பிரித்தானிய பிரதமருடனான கேள்வி நேரம் நேற்றுமுன்தினம் என்பதால் பெருமளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு வருகை தருவார்கள் என்பதாலும் இத்தினத்தை கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு தேர்ந்தெடுத்திருந்ததாக நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தவர்கள் தெரிவித்தனர்.

பிரித்தானியாவின் தற்போது நிலவும் குளிரான கால நிலையிலும் பெருமளவிலான மக்கள் கனவயீர்ப்பு நிகழ்வில் பங்கேற்றிருப்பதுடன் தம்முடன் பாடசாலை சிறுவர்கள் மற்றும் குழந்தைகளையும் அழைத்து வந்திருந்தனர்.

மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டதாக இக் கவனயீர்ப்பு நிகழ்வு அமைந்தது.

* சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் தமிழின படுகொலையை தடுத்து நிறுத்துமாறு பிரித்தானிய அரசு வற்புறுத்த வேண்மென கோருவது.

* இலங்கையில் தமிழர் தாயக பிரதேசங்களில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை பிரித்தானிய அரசு அங்கீகரிக்க கோருவது.

* தமிழின எழுச்சிக்கு ஒத்துழைக்கும் தமிழக மக்களுக்கு நன்றி தெரி விப்பது.

ஆகியனவே அந்த மூன்று நோக்கங்களும் ஆகும்.

பிரித்தானியாவின் வெவ்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கவனயீர்ப்பு நிகழ்வில் பங்கேற்று தமது ஆதரவை வெளிப்படுத்தியதுடன் அங்கிருந்த மக்கள் மத்தியில் தமது கருத்துக்களையும் பகிரிந்து கொண்டு பிரித்தானிய தமிழர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினனர்களான கீத் வாஸ், தமிழர்களுக்கான அனைத்து கட்சிக்குழுவின் தலைவரான விரேந்திர சர்மா, சியோப்கெயின் மக்டொனா, சுசான் கிரைமர், அன்ரூ பெலிங், ரொம் பிரேக், ஜோன் ரையன், பரிகார்டினர் உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் உரையாற்றினர்.

### தமிழீழம் உருவாக்கப்பட வேண்டும்

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு என தனியான தமிழீழ தனியரசு உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரித்தானிய தமிழர்களின் விருப்பம் இங்கு வெளிப்படுத்தப்பட்டது.

சிறிலங்கா அரசினால் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்பாகவும் அங்குள்ள தமிழ் மக்களின் அவல நிலை தொடர்பாகவும் பிரித்தானிய மக்களுக்கு எடுத்து விளக்கும் வகையிலான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இலங்கை தமிழர்கள் மீதான இனப்படுகொலையை நிறுத்து, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி, தமிழ்நாட்டுக்கு நன்றி - பிரித்தானிய தமிழர். சிறந்த தேசம் - தமிழ் நாடு, நன்றியுள்ள மக்கள் - தமிழீழ மக்கள், அப்பாவி தமிழ் மக்கள் மீதான குண்டு வீச்சை நிறுத்து, சிறிலங்கா ஒரு பயங்கரவாத அரசு, பிரித்தானியாவே சிறிலங்கா அரசுமீது பொருளாதாரத் தடையை விதி, ஐ.நாவே சிறிலங்கா மீது ஆயுத தடையை விதி, ஐரோப்பிய ஒன்றியமே ஜீ.எஸ்.பீ.பிளஸ் - யுத்த நிதிக்கான வழி என ஆங்கிலத்தில் வைக்கப்பட்டிருந்த பதாதைகளில் வாசகங்கள் காணப்பட்டன. ஆங்கிலம் மற்றும் தமிழில் பதாதைகள் வைக்கப்பட்டிருந்தன.

# புதிய பட்டதாரி ஆசிரியர்களுக்கு இந்தத் தவணையில் நியமனக் கடிதங்கள்

அச்சுவேலி, நவ.21

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் பதவி வெற்றிடங்களைக் கருத்தில்கொண்டு நியமனம் வழங்கப்படவிருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் மூன்றாம் தவணையில் பாடசாலைகளில் கடமைப் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் நியமனக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன.

பொருத்தமான முறையில் குறுகிய கால அவகாசத்தில் நியமனக் கடிதங்களைக் கையளிப்பதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண ஆளுநரின் வழிப்படுத்தலில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

வடக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதாகவும்; சம்பந்தப்பட்டவர்கள் கடமையைப் பொறுப்பேற்பதில் உள்ள இடைவெளி அவர்களின் சேவைக்காலத்தில் பாதிப்பை ஏற்படுத்துவ்தாகவும் முறைப்பாடுகள் வடக்கு மாகாண ஆளுநருக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கும் பெருமளவில் செய்யப்பட்டு வருகின்றன. அதையடுத்து நியமனக் கடிதங்களைக் குறித்தகால இடைவெளியில் வழங்குவதற்கான ஏற் பாடுகள் செய்யப்படுவதாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(202-11)

# நல்லூர் சத்திய சாயி நிலையத்தில் பாபாவின் 83 ஆவது அவதார விழா

யாழ்ப்பாணம், நவ.21

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 83 ஆவது அவதாரதின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர், கைலாச பிள்ளையார் கோயிலடியில் அமைந்துள்ள யாழ்.மத்தி ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்வுகள் 5.15 மணிக்கு ஆரம்பமாகும். ஸ்ரீ சாயி கணபதி அபிஷேகம், அஷ்டோத்திர புத்தக சமர்ப்பணம், அஷ்டோத்திரம், 1008 நாமார்ச்சனை, பஜனை, பாலவிகாஷ் சிறுவர்களின் கலை நிகழ்வுகள் ஆகியவை இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். இந்த நிகழ்வில் இன்னிசை நிகழ்ச்சி, நாடகம், பிரசாந்தி நிலைய அனுபவப் பகிர்வு, நாட்டிய நாடகம் போன்றன நடை பெறவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவார். (201)

# இந்திய நிவாரணப் பொருள்கள் அடுத்தவாரம் வன்னி செல்லும்

## நேற்று செஞ்சிலுவைக் குழுவிடம் ஒப்படைப்பு

கொழும்பு, நவ. 21

வன்னியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள மக்களுக்கென இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட நிவாரண பொருள்கள் நேற்று கொழும்பில் வைத்து செஞ்சிலுவை சர்வதேச குழுவிடம் கையளிக்கப்பட்டன.



நிவாரணப் பொருள்களுக்குரிய ஆவணத்தை செஞ்சிலுவை அதிகாரியிடம் கையளிக்கிறார் இந்தியத் தூதர் அலோக் பிரசாத்.

ஆயிரத்து 700 தொன் உணவுப் பொருள்கள், மருந்து மற்றும் உடைகள் அடங்கிய நிவாரண உதவியை இந்திய தூதரக அதிகாரிகள் சர்வதேச செஞ்சிலுவை குழுவிடம் கையளித்தனர்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஆலோக் பிரசாத் மற்றும் அத்தியவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ். பி. திவாரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர்.

வன்னி மக்களுக்கு மிகவும் அவசரமாகத் தேவைப்படும் உணவு, தங்குமிடம், குடிதண்ணீர், மருந்து மற்றும் சுகாதாரம் என்பன காணப்படுகின்றன என அங்குள்ள சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பணி யாளர்கள்அவதானித்துள்ளனர் என்று இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் தலைவர் போல் கஸ்டெலா தெரிவித்தார்.

இந்தியா கையளித்துள்ள உணவு மற்றும் நிவாரணப் பொருள்களை அடுத்த வாரமளவில் சர்வதேச செஞ்சிலுவைக் குழு வன்னிக்கு எடுத்துச் செல்லவுள்ளதாகவும் இந்தப் பொருள்கள் இடம்பெயர்ந்த மக்களின் சில அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுத மோதலால் உருவாகியுள்ள துயரங்களைப் போக்குவதற்காக இந்தியா கையளித்துள்ள உணவு மற்றும் மருந்துப் பொருள்களை பொது மக்களிடம் சர்வதேச செஞ்சி லுவைக் குழு நேரடியாக வழங்கும் என்றும் அவர் அங்கு உரையாற்று கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முதல் தடவையாக இந்தியா சர்வதேச செஞ்சிலுவை குழு ஊடாக உதவிகளை வழங்கியுள்ளது.

இது இந்திய அதிகாரிகள் தங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் இலங்கையில் தாங்கள் ஆற்றி வரும் பணியை அங்கீகரித்துள்ளதையும் புலப்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வன்னியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் இந்த உதவிப் பொருள்களை வழங்கு வதற்கு இலங்கை அரசின் ஒத்து ழைப்பு அவசியம் என அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழக மக்களால் வழங்கப்பட்ட நிதியைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களும் இந்திய அரசின் உதவிப் பொருள்களும் இதில் அடங்கியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 07: 22.11.2008 | |
| | சனிக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ.06.27வரை |
| நட்சத்திரம்: | உத்தரம் |
| | பி.இ.01.05 வரை |
| சுபநேரம்: | 03.11 - 04.41 |
| ராகுகாலம்: | 09.11 - 10.41 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்க பிரிட்டன் முன்வருகை

லண்டன், நவ. 20

குறைந்த செலவில் மலேரியா மற்றும் எய்ட்ஸ் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்க இந்திய மருந்து உற்பத்தியாக்கல் நிறுவனங்களுக்கு பிரிட்டன் உதவ முன்வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளின்டன் அறக்கட்டளையுடன் இணைந்து இந்த உதவி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என பிரிட்டனின் சர்வ தேச மேம்பாட்டுக்கான செயலர் டக்ளஸ் அலெக்சாண்டர்தெரிவித்தார்.

இதற்காக 90 லட்சம் பிரிட்டன் பவுண்ட் வழங்கப்படவுள்ளது. 2009 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டுவரையில் நடைமுறைப் படுத்தப்படும். இதன்படி இந்திய நிறுவனங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படவுள்ளன.

எய்ட்ஸ் நோயாளிகளுக்கு அளிக்கவேண்டிய சிகிச்சைகள், மருத்துவமுறைகள் ஆகியனவும், குறைந்த செலவில் மலேரியா நோய்த்தடுப்பு மருந்துகளைத் தயாரிப்பதற்கும் தேவையான தொழில்நுட்பம் போன்றனவும் இதன் மூலம் வழங்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் 1.10 கோடி மக்கள் பயனடைவர். எய்ட்ஸ் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் சிகிச்சைகள் கிடைக்க வழி ஏற்படும்.

2007 ஆம் ஆண்டு 30 லட்சம் பேர் எச்.ஐ.வி. தொற்றுக் காரணமாக உயிரிழந்தனர். மலேரியா நோய் தாக்கி 10 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் இந்திய அரசும் தனியார் மருத்துவ நிறுவனங்களும் இணைந்து அனைத்து மக்களுக்கும் உரிய மருத்துவ சிகிச்சை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் மிகக் குறைந்த செலவில் மருந்துகளை அளிப்பதன் மூலம் அவர்களது நிதிச் சுமையைக் குறைக்க முடியும் என இந்திய அரசு கருதுகிறது.

மிகக் குறைந்த விலையில் மருந்துகளைத் தயாரித்து வளரும் நாடுகளுக்கு இந்திய நிறுவனங்கள் வழங்கி வருகின்றன. நவீன மருந்துகளை மிகக் குறைந்த விலையில் தயாரிப்பதில் அவற்றுக்கு உள்ள சிரமங்களைப் போக்கி அவர்களின் உற்பத்தியை அதிகரிக்கச்செய்வதே பிரதான நோக்கம் - என்றும் டக்ளஸ் அலெக்சாண்டர் தெரிவித்தார்.

## மீன்பிடிப் படகு கடத்தல்

மீன்பிடி படகு ஒன்றை சோமாலிய கடற் கொள்ளையர்கள் கடத்தினர் என கோலாலம்பூரிலிருந்து செய்தி வெளியாகியுள்ளது. கடந்த 2 வாரங்களில் இப்பகுதியில் கடத்தப்படும் 8 ஆவது சிறிய ரக கப்பல் (மீன்பிடி படகு) இது என்பது குறிப்பிடத்தக்கது.

படகில் 16 மீனவர்கள் உள்ளனர். மத்திய தரைக் கடல் பகுதியில் ஹாங்காங் நாட்டுக் கொடியுடன் சென்று கொண்டிருந்தபோது இக்கப்பல் கடத்தப்பட்டுள்ளது. இப்பகுதியில் இந்த ஆண்டில் இதுவரை 95 கப்பல்கள் மீது கடற் கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதில் 35 கப்பல்கள் கடத்தப்பட்டுள்ளன. தற்போது 17 கப்பல்கள் கடத்தல்காரர்கள் வசம் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது

# 75 ஆண்டுகள் சிறைத் தண்டனை 30 வருடங்களாகக் குறைப்பு

மலேஷியாவிலுள்ள இரப்பர் தோட்டத்தில் பணிபுரிந்த தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த தொழிலாளி ஒருவருக்கு 75 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

48 வயதான இவர் தமது முந்தைய தாரத்துக்குப் பிறந்த மகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

13 வயதான அந்த சிறுமியை அவர் தொடர்ந்து 2 ஆண்டுகள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தினார் எனவும் சிறுமிக்கு ஒரு குழந்தை பிறந்த பிறகே அவர் துன்புறுத்துவதை நிறுத்தினார் எனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி இவருக்கு 75 ஆண்டுகள் ஜெயில் தண்டனை விதித்தார். அத்தோடு 50 முறை சவுக்கடி கொடுக்கும்படியும் உத்தரவிட்டார்.

இத்தீர்ப்பை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்தார். வழக்கை விசாரித்த நீதிபதி சூரியாடி ஹாலிம் ஓமர், "தாய்லாந்துக்காரரின் நடவடிக்கை காட்டுமிராண்டித்தனமானது என்றும், மிருகம் போல நடந்துகொண்டுள்ளார் என்றும்" அவர் விமர்சித்தார். இருந்த போதிலும், தண்டனை விதிக்கும்போது உணர்ச்சிவசப்படக்கூடாது. குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனைசட்டத்துக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என்றும் கூறினார்.

அதன்பிறகு குற்றவாளியைப் பார்த்து நீங்கள் ரொம்பவும் அதிர்ஷ்டக்காரர். சட்டம் உங்களைப்போல தீயதாக இல்லை என்று கூறிவிட்டு, அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை 30 ஆண்டுகளாகவும் சவுக்கடியை 24 தடவையாகவும் குறைத்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக அரங்கில்

# பாக். இராணுவத்தின் ஒத்துழைப்புடனே ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்படுகிறது

## அமெரிக்க இராணுவ அதிகாரி தகவல்

காபூல், நவ. 21

பாகிஸ்தான் நாட்டில் தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் பகுதியில் நாங்கள் அந்த நாட்டின் இராணுவத்தின் ஒத்துழைப்புடனேயே இராணுவ ஹெலிகொப்டர்களை அனுப்பி ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகிறோம் - இவ்வாறு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானை அமெரிக்க இராணுவம் கைப்பற்றியதும், அந்த நாட்டில் இருந்த தலிபான்கள் மற்றும் அல்-குவைதா அமைப்புகளின் தீவிரவாதிகள் அங்கிருந்து தப்பி ஓடி பாகிஸ்தானின் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அங்கிருந்து கொண்டு அவர்கள் ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திவிட்டு பாகிஸ்தானுக்கு தப்பி வந்து விடுகின்றனர். இவர்களை ஒடுக்கும்படி அமெரிக்க அரசு எத்தனையோ முறை கேட்டுக் கொண்டபோதும் முஷரப் ஜனாதிபதியாக இருந்தவரை அவர் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் பதவிக் காலத்தின் இறுதிக் கட்டத்தில் அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானிலிருந்து ஏவுகணை தாக்குதல் நடத்த தொடங்கியது.

அதன் பிறகு இப்படி தாக்குதல் நடத்துவது தொடர்கின்றது. தேர்தலுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த மக்கள் கட்சி கூட்டணியினர் அமெரிக்க ஏவுகணை தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். ஆனால், இந்த எதிர்ப்பு எல்லாம் வெறும் நாடகம் என்பது இப்போது தெரியவந்துள்ளது.

இது குறித்து ஆப்கானிஸ்தானில் இருக்கும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் செய்தியாளர்களிடம் கூறியுள்ளவை வருமாறு:-

பாகிஸ்தான் ஒத்துழைப்புடன் பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்திருக்கும் தீவிரவாதிகள், ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்க இலக்குகள் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக அமெரிக்க இராணுவ ஹெலிக்கொப்டர்கள் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த தாக்குதலை பாகிஸ்தான் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் தான் நாங்கள் நடத்தி வருகிறோம்.

பாகிஸ்தான் எல்லைக்குள் ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் உள்ளே சென்று நாங்கள் தாக்குதல் நடத்துகிறோம். இந்த தாக்குதலுக்கு உள்நாட்டு மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால் பாகிஸ்தான் அரசு, உள்நாட்டு மக்கள் கோபத்தைத் தணிக்கும் விதமாக நடந்து கொண்டு வருகிறது - என்றார்.



சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலான அழகிப் போட்டி பிலிப்பைன்சில் கடந்த வாரம் நடந்தது. இதில் வெற்றி பெற்ற மிஸ் ஏர், மிஸ் எர்த், மிஸ் வாட்டர் அழகிகள் பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் உள்ள பூங்காவில் நேற்று முன்தினம் போஸ் கொடுக்கின்றனர். தான்சானியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ நாடுகளைச் சேர்ந்த இவர்கள் தங்கள் நாடுகளில் தலா 20 ஆயிரம் மரக்கன்றுகள் நடுவதாக உறுதியேற்றனர்.

# கடத்தப்பட்ட சவூதிக் கப்பலை விடுவிக்க கப்பம் கோரி ஒலிநாடாவில் அறிவிப்பு

டுபாய், நவ. 21

சவூதி அரேபியாவுக்குச் சொந்தமான "சிரியஸ் ஸ்டார்" என்ற எண்ணெய்க் கப்பல் சோமாலியா கடல் எல்லையில் திங்கட்கிழமை கடத்தப்பட்டுள்ளது. கப்பலை விடுவிக்க அதிக தொகை கேட்டு கடத்தல்காரர்கள் அனுப்பிய ஒலிநாடாவை அல்-ஜசீரா வானொலி ஒலிபரப்பியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பணம் தருவதற்கு சம்மதித்தால் பேச்சு நடத்தலாம் என்று ஃபாரா அப்துல் ஜமே என்பவர் தெரிவித்துள்ளார்.எவ்வளவு தொகை என்பதை அவர் குறிப்பிடவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கப்பலின் பாதுகாப்புக்கு முழு உத்தரவாதம் அளிக்கப்படும் எனவும் கப்பலில் உள்ளவர்களின் உயிருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"வெறுமனே பணத்தைப் பெற்றுக் கொண்டு கப்பலை விடுவிக்கத் தயாராக இல்லை என்றும், கள்ளப் பணத்தைத் தந்து கப்பலை மீட்டுவிட முயற்சிக்காதீர்கள். கள்ளப்பணத்தைக் கண்டறியும் இயந்திரம் தங்களிடம் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கென்யாவிலிருந்து 800 கி.மீ. தொலைவில் கடல் பகுதியில் இக்கப்பல் நங்கூரமிட்டுள்ளது எனத் தெரிகிறது. இந்தக் கப்பலில் 20 இலட்சம் பீப்பாய் எண்ணெய் உள்ளது. கப்பல் ஊழியர்கள் 25 பேர் உள்ளனர். இக்கப்பலில் 19 பேர் பிலிப்பைன்ஸ் நாட்டவர்கள். 2 பேர் பிரிட்டன், 2 பேர் போலந்து, தலா ஒரு குரேஷிய மற்றும் சவூதி நாட்டவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

# வட துருவத்தில் பனிப் பாறைகள் வேகமாக உருகுகின்றனவாம்

## விஞ்ஞானிகள் பெரும் கவலை

ஆர்க்டிக், நவ. 21

வட துருவத்தில் பனிப்பாறைகள் வேகமாக உருகுகின்றன என விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். இதனால், 2013 ஆம் ஆண்டில் ஆர்க்டிக் பகுதியில் பனி இருக்காது என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

புவி வெப்பமடைவதால் இத்தகைய மாற்றம் நிகழ்கின்றது என விஞ்ஞானிகள் குறிப்பிட்டுள்ளனர். 60 ஆண்டுகளில் ஆர்க்டிக் பகுதியிலுள்ள பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் மேலே உயரும் என முன்னர் கணிக்கப்பட்டிருந்தது. ஆனால், செயற்கைக் கோள் படம் மற்றும் கணினியில் திரட்டப்பட்ட தகவல்கள் அடிப்படையில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் பனிப் பாறைகள் உருகிவிடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

2007 ஆம் ஆண்டு ஆர்க்டிக் பகுதியிலிருந்த நிலையுடன் தற்போதைய நிலையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல இலட்சம் சதுர கிலோமீற்றர் வரையிலான பனிப் பாறைகள் உருகியுள்ளன எனத் தெரியவந்துள்ளது என்று பேராசிரியர் வியஸ்லா மஸ்லோவஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் கடற்படையில் சூப்பர் கம்ப்யூட்டர் அளித்துள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார் என லண்டனில் வெளியாகும் 'அப்சர்வர்' நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

# கடற் கொள்ளையரின் பிடியில் 127 பிலிப்பைன்ஸ் நாட்டவர்

மணிலா, நவ. 21

சோமாலியா கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட கப்பல்களில் 127 பிலிப்பைன்ஸ் நாட்டவர் சிக்கியுள்ளனர் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

சவூதி அரேபியாவின் எண்ணெய்க் கப்பல் 'சிரியஸ் ஸ்டாரில்' 19 பிலிப்பைன்ஸ் பணியாளர்கள் உள்ளனர்.

இந்த ஆண்டில் இதுவரை சோமாலியாவைச் சேர்ந்த கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 17 கப்பல்களில் சிக்கியவர்களில் 201 பேர் பிலிப்பைன்ஸைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களில் 127 பேர் கப்பல் ஊழியர்கள் என்றும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

இதுவரை 10 கப்பல்களை கடற் கொள்ளையர்கள் விடுவித்துள்ளனர். இதில் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த 74 பேர் வீடு திரும்பியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

கப்பல் பணியில் உலகம் முழுவதும் 2 இலட்சம் பேர் ஈடுபட்டுள்ளனர். இதில் மூன்றில் ஒரு பகுதியினர் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு பழைய நடைமுறையிலேயே அனுமதி

அச்சுவேலி, நவ.21

தேசிய கல்வியியல்க் கல்லூரிகளுக்கு மீண்டும் பழைய நடைமுறையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இதுதொடர்பான விவரங்கள் இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் வர்த்தமானியில் இடம்பெற்றுள்ளன.

தேசிய கல்வியியல்க் கல்லூரிகளுக்கு வழமையான நடைமுறையின் பிரகாரம் 24 பாடத்துறைகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு ''ஆசிரியர் டிப்ளோமா'' பயிற்சி மூன்று வருடகாலப் பகுதியைக் கொண்டதாக வழங்கப்பட்டு வந்தது.

இந்த நடைமுறையில் மாற்றங்களை மேற்கொண்டு பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களுக்கு 1½ வருட ஆசிரியர் பயிற்சி வழங்குவது என்ற அடிப்படையில் குறித்த சில பாடங்களுக்கு மட்டும் கடந்த மாதம் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

கடந்த மாதம் கோரப்பட்ட விண்ணப்பம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ரத்துச் செய்யப்பட்டு வழமைபோல ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் இருந்து 24 பாடத்துறைகளுக்கும் விண்ணப்பங்கள் மீண்டும் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களை 21.11.2008 வர்த்தமானியில் பார்வையிடலாம். (202-11)

## மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் மாணவர்கள் கௌரவிப்பு

கரவெட்டி, நவ.21

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு மதிப்பளித்தல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ.ராகவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி நெல்லியடிக்கிளை நிறைவேற்று அதிகாரி சி.சிறிகாந்தன் பங்குகொள்வார். (202-70)

## மணவாளக் கோல உற்சவம்

யாழ்ப்பாணம்,நவ.21

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் மணவாளக்கோல உற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சங்காபிஷேகம், திருவீதி உலா வருதலும் இடம்பெறும்.

இந்தக் கிரியைகள் யாவும் ஈசான சிவாச்சாரியார் இ.ரமணிதரக் குருக்கள் தலைமையில் நடைபெறும். (204)

## மகரஜோதிப் பெருவிழா

வடமராட்சி,நவ.21

கோண்டாவில் அருள்மிகு சபரீச ஐயப்பன் கோயில் வருடாந்த மகரஜோதிப் பெருந் திருவிழா நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

சிறப்புத் திருவிழாக்களான மகிஷ வேட்டைத் திருவிழா 28ஆம் திகதி வெள்ளிக் கிழமை பி.ப. 2 மணிக்கும், மஞ்ச மாதா பூஜைத் திருவிழா 29ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கும், தேர்த்திருவிழா 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கும், தீர்த்தத் திருவிழா அடுத்த மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கும் இடம்பெறும்.

உரும்பிராய் பிரம்மஸ்ரீ க.மு.சோமசுந்தரக் குருக்கள் பெருந்திருவிழா குருமணியாக இருந்து திருவிழாவை நிறைவேற்றி வைப்பார். (202-236)

# தொல்புரம் பிரிவின் சிறந்த விவசாயிகள் 24 பேரும் இன்று கௌரவிக்கப்படுவர்

தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் போட்டியிட்டு வெற்றியீட்டிய 24 விவசாயிகளையும் கௌரவிக்கும் வைபவம் அப்பிரிவு விவசாயப் போதனாசிரியர் செல்வி தி.கலைவதனா தலைமையில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு தொல்புரம் கமநல சேவைகள் நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி பாபு.தேவநந்தினியும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வெற்றியீட்டிய விவசாயிகளின் பெயர் வருமாறு:

**சிறந்த நெல் உற்பத்தியாளர்**

சி.இராஜசிங்கம் (தொல்புரம் மத்தி), இ.வெள்ளியம்பலம் (சங்கரத்தை), செ.சந்திரசேகரம் (சங்கானை).

**சிறந்த சேதனப் பண்ணையாளர்**

நடராஜா மயூரன் (அராலி மேற்கு), சுப்பிரமணியம் சரோஜினிதேவி (அராலி தெற்கு), வ.வீரசிங்கம் (தொட்டிலடி).

**சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்**

செல்லப்பா கந்தசாமி (நிற்சாமம், சங்கானை), கார்த்திகேசு நடராஜா (அராலி தெற்கு), நவரத்தினம் சிவனேஸ்வரன் (அராலி மேற்கு)

**சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்**

நடராசா செந்தில்நாதன் (அராலி மேற்கு), பொன்னுத்துரை போசராசன் (மூளாய் தெற்கு), அம்பலவாணர் தில்லையம்பலம் (அராலி தெற்கு).

**சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி**

கந்தசாமி தவராணி (பறாளாய், சுழிபுரம்), நாகேஸ்வரி பரிமளகாந்தி (தொல்புரம்), பத்மசோதிநாதன் நவநீதராணி (கருங்காலி, காரைநகர்)

**சிறந்த சோளச் செய்கையாளர்**

தர்மலிங்கம் விசாகரன் (சுழிபுரம் கிழக்கு), சின்னத்துரை கணேசமூர்த்தி (மூளாய்), சுப்பிரமணியம் புண்ணியமணியம் (காரைநகர்)

**சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்**

இராசரத்தினம் பரிமணந்ததேவி (தொல்புரம்), நாகரத்தினம் திருநாவுக்கரசு (மூளாய் தெற்கு), க.ரவீந்திரன் (சங்கரத்தை)

**சிறந்த குரக்கன் செய்கையாளர்**

கந்தையா கனகரத்தினம் (சுழிபுரம்), செல்லன் உருத்திரன் (சுழிபுரம்), கந்தையா வடிவேலு (மூளாய் தெற்கு).(202)

## 'மனிதாபிமானத்துக்கான தகவல் பரிமாற்றம்' போட்டியில் யாழ்ப்பாணத்தில் ஐவர் வெற்றி

யாழ்ப்பாணம், நவ.21

'மனிதாபிமானத்திற்கான தகவல் பரிமாற்றம்' என்ற தலைப்பில் மனிதநேயக் கூட்டமைப்பு நிறுவனத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட திறந்த கட்டுரைப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் 5 பேர் வெற்றியீட்டியுள்ளனர்.

இந்தப் போட்டியில் பிரிவு 'ஏ' இல் இணுவில் மத்திய கல்லூரியைச் சேர்ந்த சிந்து சிவபாலன் முதலாம் இடத்தையும், மீசாலை மேற்கைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை சரஸ்வதி 4ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

பிரிவு 'பி' இல் ஆவரங்கால், புத்தூரைச் சேர்ந்த ப.துளசிகா, யாழ்.பிறவுண் வீதியைச் சேர்ந்த சுகிர்தா சிறீவரதன் ஆகியோர் மூன்றாம் இடத்தையும், யாழ்ப்பாணம், முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த எஸ்.நிரூபமா நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி கொழும்பு - 07, ஹோரான் பிளேசில் அமைந்துள்ள லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு மனிதநேயக் கூட்டமைப்பின் யாழ். கிளை அலுவலகத்தின் 021 222 6655 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

# வடமராட்சிக் கல்வி வலயத்தில் வெளிவாரி மதிப்பீட்டின் மூலம் ஒன்பது பாடசாலைகள் தெரிவு

மந்திகை, நவ.21

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட வெளிவாரி மதிப்பீட்டின்படி தெரிவான பாடசாலைகளின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வெளிவாரி மதிப்பீட்டின்போது பாடசாலைகளின் பொது முகாமைத்துவம், பௌதீக மனிதவள முகாமைத்துவம், முறைசார் பாடவிதான முகாமைத்துவம், இணைப்பாடவிதான செயற்பாடுகள், மாணவர் அடைவு மட்டம், மாணவர் சமூக நலன் பாடசாலையும் சமூகமும் பற்றிய அறிக்கைகள் என்பன பெறப்பட்டன.

இதன்பிரகாரம் முடிவுகள் வருமாறு:

**1ஏ, பி, 1சி பாடசாலைகள்**

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

**தரம் 2 பாடசாலைகள்**

கரணவாய் மகா வித்தியாலயம், இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வல்வை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**தரம் 3 பாடசாலைகள்**

மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம், கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம், கரவெட்டி மணியகாரன் தோட்டம் பாடசாலை. (202-218)

## செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.21

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் சைவ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

## சைவ நெறித் தேர்வின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.21

அகில இலங்கைச் சைவநெறித் தேர்வு - 2007க்கான பரிசளிப்புவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.நீராவியடி, கல்லூரி வீதியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலனசபை உப தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இதேவேளை -

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி என்பவற்றில் பரிசு பெற்றோர் விவரம் வருமாறு:

**பேச்சுப் போட்டி**

*கீழ்ப்பிரிவு:* இரவீந்திரன் சஞ்ஜீவ் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), நவநீதா சிவநேசநாதன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), விதுர்ஷா பழனித்துரை (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

*மத்திய பிரிவு:* அருள்பரன் உமாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), மனோகரதாஸ் மிதுன்பரிசித் (யாழ்.மத்திய கல்லூரி), பவித்திரா சிவஞானம் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்).

*மேற்பிரிவு:* நந்தினிதேவி ஜெகநாதன் (கோப்பாய்க் கிறிஸ்தவக்கல்லூரி), அஜந்தா தேவராசா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), கௌதமி றஞ்சன் (இராமநாதன் கல்லூரி).

**கட்டுரைப் போட்டி**

*மேற்பிரிவு:* கல்யாணி தங்கராசா (இணுவில் மத்திய கல்லூரி), ஜலயா விஜயகுமார் (இராமநாதன் கல்லூரி), ராஜினி முருகையா (சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்). (204)




குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையத்தினரால் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் நடத்தப்பட்ட முதியோர் கௌரவிப்பு நிகழ்வில் முதியவர் ஒருவரை குரும்பசிட்டி ஐக்கிய நாணய சங்கத் [illegible] யும், முதியவர் ஒருவருக்கு பொன்.பரமானந்தா வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் அம்பிகாதேவி யோகராசா [illegible] முதலிரு படங்களிலும் காணலாம். கௌரவிக்கப்பட்ட முதியவர்களை மூன்றாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆம் ஆண்டின் நிறைவினிலே



பிறப்பு
23.05.1929

இறப்பு
20.11.2006

அமரர்
## லயன் பேதுரு பிலிப்ஸ்

(வைத்தியமணி, வைத்தியவாரிதி, வைத்தியரத்னம், வைத்திய கலாநிதி, சகஸ்றாபிஷேக வைத்திய சிகாமணி, சமாதான நீதிவான்)

ஈராண்டுகள் கடந்திடினும் ஈரவிழிகள் காயவில்லை
பக்குவமாய் பண்பாக எமை வழிநடத்தி உம் வழி தொடரவைத்தவரே!
பாவிகள் நாங்கள் முகம் காண ஏங்குகின்றோம் கலங்குகின்றோம்
ஆரோக்கியவாழ்வின் பாசமுள்ள உறவுகள் உம் ஆசி பெற தவிக்கின்றோம்
பாசமற்ற பிறவிகளும் கூடி வாழும் இவ்வுலகில்
எம்மவரே! எந்தையே! எந்நாளும் உமை மறவோம்
உமை தொழுதே நன்றியுடன் வாழ்கின்றோம்
உம் பணி தொடர இறை ஆசி வேண்டுகின்றோம்.

என்றும் நினைவுடன்:
**குடும்பத்தினர்.**


29/9, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(79945)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 05 . 08 . 1945



உதிர்வு 22 . 10 . 2008

## அமரர் முத்தையா பாலசுப்பிரமணியம்

காலனவன் கணக்கு வைத்துக்
காத்திராமல் கவர்ந்து சென்றான்
கண்ணீரை நாம் வடித்தே
காணிக்கை ஆக்குகின்றோம்

நேர்மையாய் வாழ்ந்து நீங்கள்
நேரான பாதை காட்டி வைத்து
தூரதேசம் அனுப்பி வைத்தும்
உம்முடனும் எமை வைத்தீர்

கட்டியவள் பரிதவிக்க
பிள்ளைகளோ கண்கலங்க
மருமக்கள் மனங்கலங்க
பேரப்பிள்ளைகளும் பேதலிக்க

பொறுப்புகளை முடித்துவிட்டேன்
போதும் இனி வாழ்க்கை என்று
பேரிடியை எமக்களித்து- நீர்
விண் சென்று திங்களொன்று கழிந்ததுவே!

ஆறுதல் யார் கூறிடினும்
ஆறுதில்லை எம் துயரம்
உம் ஆத்மா சாந்திபெற வைக்க
ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவால் நாம் கலங்கித் தவித்தவேளை உடன் வந்து ஆறுதல் கூறி எம்மைத் தேற்றியோருக்கும், எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

(சி/555388)

**குடும்பத்தினர்.**

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

## அமரர் செல்வரத்தினம் சிவன்ரூபன் (B.Sc. Cey), Dip.in.Ed.

(இளைப்பாறிய அதிபர்- SLTS -I)



காலையில் சேவைக்காக பள்ளி நான் செல்லும் போது
பாலையே வாங்கச் சென்றீர் அம்மாவின் நோயினுக்காய்
இடையே வந்தபோது
காலனின் கையில் வெற்றுடலான காட்சி மதியம்
கண்டபோது இதயமும் துடித்ததன்றோ
எங்களின் வாழ்க்கை மண்ணில் வானளவுயரச் செய்து
மங்கல வாழ்வைத் தந்த மகிமைசேர் தந்தையே நாம்
உங்களைப் பிரிந்து நாள்கள் முப்பத்தொன்று இன்றே ஆனால்
பொங்கிடும் நினைவில் நீங்கள் யுகமுள்ள வரைக்கும் வாழ்வீர்.

எமது குடும்பத்தலைவரின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு எமதில்லம் வந்து இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர்வளையம் சாத்தி, மலர்மாலை அணிவித்தவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் ஆறுதல் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மற்றும் வேறு வழிகளில் உதவி துயர்பகிர்ந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

23.11.2008 ஞாயிற்றுக்கிழமை நல்லூர் சட்டநாதர் கோயில் திவ்ய ஜீவன மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்வு 04.02.1937

மறைவு 22.10.2008

19/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

(79984)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிக்குள் செல்லும் புதிய பாதை ஒன்றை முடிவு செய்ய 2 தரப்புகளும் இணங்கவேண்டும்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி சொல்கிறார்

வவுனியா,நவ.21

வன்னியில் ஓமந்தைக்குப் பதிலாக, வெளியேறும், உள்ளேசெல்லும் புதிய பாதை தொடர்பாக இருதரப்புக்களுக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்படவேண்டும்.

அதுவரை ஒவ்வொரு தடவையும் அந்த அந்தவகை சார்ந்த விதத்தில் இரு தரப்பினருடனும் இணக்கப்பாடு கண்டு பணியைத் தொடர்ந்து மேற்கொள்வோம்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி ஹஸ் ரெலா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஓமந்தைச் சோதனை நிலையத்தில் தமது பணியைச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கடந்த 19ஆம் திகதி தொடக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

ஓமந்தைக்குப் பதிலாக ஒட்டுசுட்டான் வீதியில் புதிய பாதை ஒன்றைத் திறக்க ஏற்பாடு செய்யுமாறு இலங்கை அரசு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் கோரியிருந்தது.

இந்த விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றைக் காண்பதற்காகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அரசுடனும் விடுதலைப் புலிகளுடனும் தொடர்ந்து பேச்சுகளை நடத்தி வருகின்றது.

இரு தரப்பாரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளுக்கு இடையே சென்று வரும் பொதுமக்கள், மருத்துவ வாகனங்கள், உணவு வண்டித் தொடர்களின் பயணம் மற்றும் மோதல்களின் காரணமாக இரு தரப்பிலும் உயிரிழப்பவர்களின் சடலங்களைப் பெற்றுக்கொள்வது போன்ற பல விடயங்கள் தொடர்பாக இரு பக்கமும் சென்று வருவதற்குப் பாதுகாப்பான ஒரு வழிமுறையைக் கண்டறிவது அவசியமாகிறது என்றும் செஞ்சிலுவைக் குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு கடந்து செல்வதற்கு ஏற்ற இடம் எது, திறந்திருக்கும் நேரம், ஒருவர் மற்றவர்களின் பகுதிகளுக்குச் சென்று வருவதற்கான நடைமுறைகள் ஆகியவை குறித்து இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இணக்கப்பாடு காணவேண்டும் என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

ஓமந்தைச் சோதனை நிலையம் வழியாகச் சென்று வரும் பொதுமக்கள் மற்றும் வாகனங்களுக்குப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத வரையில் தம்மால் அங்கு பணிக்குச் செல்ல இயலாது என்று அந்த அமைப்பின் தலைமையகம் கூறியுள்ளது.

எனினும் ஓமந்தைச் சோதனை நிலையத்தில் தாங்கள் கடமையில் இல்லாவிட்டாலும் இலங்கையில் நடைபெறும் மோதல்களினால் வன்னிப் பகுதியில் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு அளித்துவரும் பாதுகாப்பும், உதவி நடவடிக்கைகளும் பாதிப்படையவில்லை என்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மேலும் அறிவித்துள்ளது.

அம்புலன்ஸ் சேவை, சடலங்கள் ஒப்படைத்தல் போன்ற விடயங்களைத் தனித்தனியாகச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் தொடர்புகொண்டு ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம் என்றும் செஞ்.குழு மேலும் தெரிவித்துள்ளது. (அ-1)



இணுவில் சிவகாமி அம்மன் ஆலயத் தேர்த்திருவிழாவில் எடுக்கப்பட்ட படம். அம்மன் அலங்காரத்துடன் தேரில் வலம் வரும் காட்சி.

# சுற்றுலாத்துறையின் வீழ்ச்சியால் ஒரு லட்சம் பேர் வேலை இழப்பு!

## ஐ.தே.கட்சி எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு,நவ.21

இலங்கையில் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்திருப்பதன் காரணத்தால் இத்துறையுடன் தொடர்புபட்ட சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர் என்று ஐ.தே.கட்சி சார்பில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் எம்.பி. சந்திராணி பண்டாரவே இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

1977 முதல் 1994 ஆம் ஆண்டுவரை சுற்றுலாத்துறை பாரியளவு வளர்ச்சியடைந்திருந்தது. 94இற்கு பிறகு அது வீழ்ச்சியடையத் தொடங்கியது.

நாட்டில் இடம்பெறும் யுத்தமே அதற்குக் காரணம். இலங்கை பாதுகாப்பற்ற நாடு என்று உலக நாடுகளால் கூறப்படுகிறது. இதனால் உல்லாசப் பயணிகள் வருகை குறைந்துவிட்டது. எமது இரண்டு வருட ஆட்சிக் காலத்தில் சுற்றுலாத்துறையை வளர்க்க நாம் நடவடிக்கை எடுத்தோம். இதனால் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இலங்கை வந்தனர்.

இப்போது அவர்களின் வருகை குறைந்துவிட்டது. பல சுற்றுலா விடுதிகள் பூட்டப்பட்டு வருகின்றன. இப்போது மஹிந்த ராஜபக்ஷவால் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டிருக்கும் வரவு-செலவுத் திட்டத்தில் கூட சுற்றுலாத்துறையை வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சுற்றுலாத்துறையுடன் தொடர்புபட்ட அனைத்துத் தொழில்களும் வீழ்ச்சியடைந்து வருகின்றன. இதனால் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட சுற்றுலாத்துறை ஊழியர்கள் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர் - என்றார். (சி)



புலோலி பசுபதீஸ்வரர் ஆலய மேற்கு வாசலுக்குச் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இராஜகோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் விழாவிலே ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ எஸ்.சிவனேசக் குருக்கள் அடிக்கல் நடுவதற்கான கிரியைகளை மேற்கொள்வதையும், ஆலய பரிபாலகர் எஸ்.நாகராஜா, இராஜகோபுர திருப்பணிச்சபைச் செயலாளர் ஆர்.பஞ்சலிங்கம், பொருளாளர் என்.குகன் ஆகியோருடன் அடியார்களையும் படத்தில் காணலாம். (218)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெற்ற வாராந்த நிகழ்வு வரிசையில் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்த்துவதையும், நிகழ்வின்போது சந்நிதி ஆலயத்தில் தங்கியுள்ள வயோதிபர்களுக்குச் சந்நிதியான் ஆச்சிரமத்தால் உடுபுடைவை வழங்கும் திட்டத்தின்கீழ் அகில, உலக சைவக்குருமார் சம்மேளன சிவாச்சாரிய பீடாதிபதியும் வல்வை முத்துமாரி அம்மன் கோயில் பிரதமகுருவுமான சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் முதியவர் ஒருவருக்கு [illegible] வதையும் படங்களில் காணலாம்.

# கலை நிகழ்வு

யாழ்.சுனேரா மன்றம், திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து மாற்று ஆற்றல் உடைய பிள்ளைகளின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்துள்ள 'வண்ணத்துப்பூச்சிகளின் கோலம் - 2008' என்னும் கலைநிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.மறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் கலாபூஷணம் ஜி.பி.பேர்மினஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் இ.சிவசங்கர் பிரதம விருந்தினராகவும், 'வாழ்வகம்' அமைப்பின் தலைவர் ஆ.ரவீந்திரன், உடுவில் ஆர்க் அமைப்பின் தலைவி அருட்சகோதரி டானியலா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், இலங்கைத் திருச்சபையின் யாழ்.குருமுதல்வர் அருட்திரு. எஸ்.பி.நேசகுமார் அடிகளார் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

கலை நிகழ்வுகளாக மாற்று ஆற்றல் உடைய பிள்ளைகளின் நடனங்கள், பாடல்கள், நாடகங்கள் என்பன இடம்பெறவுள்ளன.

# ஜனாதிபதியின் அம்பாறை இணைப்பாளரின் பாதுகாவலர்கள் மூவரைக் காணவில்லையாம்!

அம்பாறை,நவ.21

அம்பாறை மாவட்டத்திற்கான ஜனாதிபதியின் இணைப்பாளரும், கருணா குழுவின் முக்கியஸ்தருமான இனியபாரதியின் பாதுகாவலர்கள் மூவர் கடந்த திங்கட்கிழமை இரவு முதல் ஆயுதங்களுடன் காணாமற்போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருக்கோவில் கோமாரி கருணா குழு அலுவலகத்தின் பொறுப்பாளரான அருணகிரி மற்றும் அருணன் ஆகிய இருவரும் மற்றும் ஒருவருமே காணாமற்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பிள்ளையான், தமது கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு அச்சுறுத்தல் நிலவுகிறது எனவும் உரிய பாதுகாப்பு வழங்கும்படியும் கேட்டுள்ளதுடன் தமது இயக்கத்தில் இருந்து விலகியோரை விடுதலைப் புலிகள் மீண்டும் தமது படையில் சேர்த்து வருகின்றனர் என்றும் கூறியுள்ளார். (சி)

# செல்வச்சந்நிதியில் வாராந்தச் சொற்பொழிவு

வடமராட்சி,நவ.21

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில், சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் பிரதி வெள்ளிதோறும் நடத்தப்பட்டு வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில், இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''பெரியபுராணம்'' தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ. குமாரவேல் நிகழ்த்துவார். (202-236)

# மனிதப் பிறவி மாண்பு மிக்கது

ஞானக்கதிர்

உலககெலாமுணர்ந்தோதற்கரியவன் இறைவன். அவன் அடியார்க்கு அண்மையன். அன்பிலார்க்குச் சேய்மையன். நண்ணினர்க்கு நல்லன். நண்ணார்க்கு நலமிலன். இன்ப வடிவினனாக விளங்குவதால் அவன் திருவடிகளை அடைவோர் பூரண இன்பத்தையடைகின்றனர். இந்த இன்பமே அமைதியையும், தூய்மையையும், ஆனந்தத்தையும் நல்கிறது. துன்பத்தை வெறுத்து இன்பத்தையடைவதற்கே ஒவ்வொரு உயிரும் துடித்துக்கொண்டிருக்கிறது. அந்த இன்பத்தைக் கடவுள் நம்பிக்கையின் மூலமே அடையமுடியும். இன்பமே எந்நாளும் துன்பமில்லையென்று அப்பரடிகளும் செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே என்று சம்பந்த சுவாமிகளும், திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீறாடைக் கழல்கள் என்று சுந்தரரும், இன்பமே என்னுடைய அன்பே என்று மணிவாசகரும் பாடியருளியமை இந்த உண்மையைப் புலப்படுத்துகிறது. புற உலக வெப்பினால் வெதும்பி நிற்கும் உயிர்களுக்கு இறைவனது திருவடி நிழலே அமைதியான இன்பத்தை அளிக்கும் என்பது அருளாளர்களின் அனுபவம்.

தெய்வமென்பதோர் சித்தம் எல்லார்க்கும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. ''எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'' என்று மணிவாசகப் பெருமான் கதறுகிறார். ஏனெனில் மானிடப் பிறவிதான் தெய்வமென்பதோர் சித்தம் ஏற்படுவதற்குரிய பிறவி. அந்தப் பெரு நோக்கத்துடன்தான் நமக்கு இப்பிறவி தரப்பட்டது. மணமுள்ள மலர் மேன்மையடைவது போல் தெய்வ வழிபாடுள்ளவனது வாழ்வு தூய்மையும், பொலிவும் அடைகிறது.

ஆனால் இந்த நிலை நமக்கு வரவேண்டியதும் அவனருளால்தான் நிறைவேறும். பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள் நம்மை விட்டகலாவிட்டால் அருள் தோன்றாது. வாழ்விலே பல காலத்தை முத்தி நெறியறியாத கூட்டத்தாரோடு செலவு செய்து விடுகிறோம். அதிலிருந்து ஒருவாறு தப்பினாலும் கல்வி ஆராய்ச்சிகள் நம் பாதையை மாற்றிவிடவும் கூடும். செல்வச் செருக்கும் நெறியை மாற்றுவதுதான். வறுமையின் கோரப்பிடியும் அப்படியே. இவற்றிலிருந்து நாம் ஒவ்வொன்றாகத் தப்பிச் செல்லும்போதுதான் உயிருக்கு ஒரு தன்னுணர்வு ஏற்படுகிறது. அந்த உணர்வைக் கலைக்கும் மாயா சக்திகளையும் வென்றால் தெய்வமென்பதோர் சித்தம் நிலைபெற்றுவிடும்.

நன்றி: அருள்ஒளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

| T | |
|---|---|
| 22 | I |

## தமிழ்மொழியும் இலக்கியமும் - 1
## Tamil Language & Literature - 1

ஒரு மணித்தியாலம்
One hour

முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் என இலக்கமிடப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. "தோடார் கமலப்பள்ளி மேய வகையில் துஞ்சும் வெள்ளை அனம் காணாய்." இங்கு தோடார் என்பது,
1)தோடுடையவர். 2) தோடு. 3)மொட்டலரும். 4)தொட்டில்.

02. பஞ்சுமஞ்சும் பதப்பாவை நல்லாய் படைவேள் பகழி அஞ்சும். இங்கு பகழி என்பது,
1)போர்ப்படை. 2)கணை. 3)அரசன் வேல். 4)மன்மதன்.

03. பேற்றிலே மிகுமொருவன் புல்லரிடம் அகப்பட்டாற் பிழை செய்வார். இங்கு புல்லர் என்பதன் எதிர்ச்சொல்,
1)நல்லியர். 2)புல்லியர். 3)நல்லார். 4)கவிஞர்.

04. வன் சொலால் எதனையும் சாதிக்க முடியாது என்பர் அறிஞர். இங்கு வன்சொல் என்பதன் எதிர்ப்பதம்,
1)இன்சொல். 2)இனிமைச்சொல். 3)நல்ல சொல். 4)நன்மைச் சொல்.

05. நேப்பியர் கணிதத்தில் நிபுணனாயிருந்தான். இங்கு நிபுணன் என்பதன் எதிர்ப்பால்,
1)நிபுணி. 2)நிபுணை. 3)நிபுனை. 4)நிபுணத்தி.

✱ புள்ளிக்கோட்டில் வரவேண்டிய சரியான சொல்லைத் தெரிவு செய்க.

06. பல்வேறு சங்கங்களுக்கும் பிரதானியாக ............... இருப்பார்.
1)செயலாளர். 2)தனாதிகாரி. 3)பொருளாளர். 4)தவிசாளர்.

07. சட்டப்புத்தகத்தில் காணப்படும் ............... மனித வாழ்வை நெறிப்படுத்துவனவாக உள்ளன.
1)சரவைகள். 2)சுவடி. 3)சாசனம். 4)பட்டயம்

08. வீதி விபத்துக்களிலிருந்து பாதசாரிகளைப் பாதுகாக்க பெருந்தெருக்களில் ............... அமைக்கப்படும்.
1)மேல் றோட். 2)மேம் பாலம். 3)தொங்கு பாலம். 4)இரும்புப் பாலம்.

09. பிழையாகப் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் படிவங்கள் .............செய்யப்படுமென அதிகாரிகள் கூறினர்.
1)அங்கீகாரம். 2)ஒதுக்குதல். 3)நிராகரிப்பு. 4)வேறுபடல்.

10. இரவில் கூட்டப்படும் சந்தை ............... எனப்படும்.
1)அல்லாங்காடி. 2)நாளங்காடி. 3)அல்காடி. 4)கறுப்புச் சந்தை.

✱ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

11. பொன் + குடம் என்ற சொற்களால் புணர்த்தினால்.
1)பொன்குடம். 2)பொட்குடம். 3)பொற்குடம். 4)பென்குடம்.

12. உயிர் மெய்க் குறில் எழுத்துக்களின் தொகை.
1)90. 2)216. 3)126. 4)26.

13. சீதா பிராட்டி தன் நாட்டை அடைய ஆவலாக இருந்தாள். இதில் வந்துள்ள வேற்றுமையும் பொருளும்.
1)2 ஆம் வேற்றுமை ஆக்கம்.
2)2 ஆம் வேற்றுமை அழித்தல்.
3)2 ஆம் வேற்றுமை அடைதல்.
4)2 ஆம் வேற்றுமை ஒப்பு.

14. இறந்த கால இடைநிலைகளைக் கொண்டுள்ள தொகுதி,
1)த், ட், வ். 2)த், ட், ப். 3)த், ட், இன். 4)த், கிறு, வ்

15. கந்தையானலும் கசக்கிக் கட்டு. இக் கூற்றின் செயப்படு பொருள்,
1) நீ. 2)கட்டு. 3)கசக்கி. 4)கந்தை.

16. அலையடித்துப் பாய்ந்து வந்த சுனாமி கிராமமக்களை அழித்துச்சென்றது. இங்கு வந்துள்ள பெயரெச்சம்.
1)அடித்து. 2)வந்த. 3)அழித்து. 4)சென்றது.

17. கடி நகர் புக்க நளனை மக்கள் வரவேற்றனர். இங்கு வந்துள்ள உரிச்சொல்,
1)புக்க. 2)நகர். 3)கடி. 4)வரவேற்பு.

18. உயிர்த்தொடர்க் குற்றிய லுகரமாக அமைவது,
1)பஃறுளி. 2)விடிவு. 3)கம்பு. 4)மரபு.

19. பொது மொழியாகக் கொள்ள முடியாத சொல்,
1)கைதி. 2)தங்கை. 3)திடுக்கை. 4)பலகை.

20. மொழிக்கு முன்னும் பின்னும் வரும் எழுவாய்ச் சொல்,
1) எ. 2)யா. 3)ஆ. 4) ஏ.

21. மெங்குழல் இனிமையாகப் பாடுகிறாள். இங்கு வந்துள்ள தொகை எது?
1)பண்புத் தொகை.
2)அன்மொழித் தொகை.
3)வேற்றுமைத் தொகை.
4)உவமைத் தொகை.

22. கண்ண! கருணைக்கடலே! காப்பாய் எம்மை. இக்கூற்று எவ்வகைத் தொடராகும்?
1)விளித் தொடர். 2)வினாத் தொடர்.
3)வேற்றுமைத் தொடர். 4)உவமைத் தொடர்.

23. மரவள்ளி சாப்பிட்டேன். இங்கு வந்துள்ள ஆகு பெயர்,
1)பொருளாகு பெயர்.
2)குணவாகு பெயர்.
3)தொழிலாகு பெயர்.
4)சினையாகு பெயர்.

24. இணைப் பிடைச் சொல்லாக அமையாதது,
1)ஆனாலும். 2)எனினும். 3)போனானோ. 4)பின்னர்.

25. சபையில் கூறக் கூச்சப்படும் சொற்களை வேறு சொற்களால் குறிப்பிட்டுச் சொல்வது,
1)இடக்கரடக்கல். 2)குளுக்குறி 3)மங்கலம். 4)சிலேடை.

26. பண்ணை வெண்ணெய் சடையான் தன் புகழ்போல் எங்கும் நிலவொளி பரந்து நிலவுகிறது. இதில் காணப்படும் அணி,
1)உருவகம். 2)உவமை. 3)தெற்குறிப்பு. 4)உயர்வு நவிற்சி.

27. "பக்ஸ்" என்ற சொல்லின் தமிழ் வடிவம்,
1)இணையம். 2)தொலை நகல். 3)மின் அஞ்சல். 4)மென் பொருள்

28. கட்டளை, ஒழுங்குமுறை, ஊழ், சூத்திரம் என்பவற்றைக் குறிக்கும் ஒரு சொல்,
1)விதி. 2)நேரம். 3)சட்டம். 4)வைப்பு.

29. பலாவின் இளங்காய் மூசு என்பது போல வாழையின் இளங்காய்
1)வடு. 2)பிஞ்சு. 3)பொத்தி. 4)கச்சல்.

30. சோடிக் கண்களின் சோகத்தை! ஜோடிக் கண்களால் அழுதது! இவ்வாக்கியத்தில் காட்டப்பட்ட உணர்ச்சி,
1)சோகம். 2)துயர். 3)துன்பம். 4)இடர்.

✱ பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.

31. ஒவ்வொரு குழுவும் பண்பாக உரையாடி பேட்டிக் குறிப்புகளை
1)எழுதினர். 2)எழுதினார்கள். 3) எழுதியது. 4)எழுதுவார்கள்.

32. ரம்பையோ தேவதையோ,
1)அங்கே நிற்பது. 2) அங்கே நிற்கிறது.
3)அங்கே நிற்பவர்கள். 4) அங்கே நிற்பவர்.

33. நல்ல நூல்களைக் கற்றாலன்றோ.
1)அறிவைப் பெற்றனர். 2) அறிவைப் பெற முடியும்.
3)அறிவைப் பெறுவார். 4) அறிவை பெற்றிட்டனர்.

34. மாணவர்கள் பலர் அப்பாடலின் பொருளைக் கூற முடியாமைக்குக் காரணம்,
1)அது அவர்களுக்கு விளங்கவில்லை.
2) அது அவர்களுக்கு விளங்காத காரணமே.
3)அது அவர்களுக்கு விளங்காத படிதான்.
4) அது அவர்களுக்கு விளங்கமாட்டாது.

35. நிறுக்கத் குறிகள் சரியாக இடப்பட்ட வாக்கியமாக அமைவது,
1)'மங்கையற்கரசியின் காதல்' 'காங்கேயன்' ஆகிய இரண்டு கதைகளில் மட்டுமே சூசிகைகள் உள்ளன.
2)"மங்கையற்கரசியின் காதல்" "காங்கேயன்" ஆகிய இரண்டு கதைகளில் மட்டுமே சூசிகைகள் உள்ளன.
3)மங்கையற்கரசியின் காதல், காங்கேயன் ஆகிய இரண்டு கதைகளில் மட்டுமே சூசிகைகள் உள்ளன.
4)"மங்கையற்கரசியின் காதல் காங்கேயன்" ஆகிய, இரண்டு கதைகளில் மட்டுமே, சூசிகைகள் உள்ளன.

✱ பாடலை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

உள்ளதுள்ளது கவிதை இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந் துரைப்பது கவிதை.

36. கவிதாசிரியர் கூறவந்த பிரதான கருத்து,
1)கவிதை இன்பம் தரவல்லது.
2)தெள்ளத் தெளிந்த தமிழில் பாடுவது கவிதை.
3)கவிதையொன்று எவ்வாறு அமையும் என்பது.
4)கவிதையில் உருவம் காணப்படும்.

37. ஒரு கவிதையின் பண்புகளாகக் கூறப்பட்டவை,
1)இன்பமும் தெளிவும்.
2)உண்மையும் தெளிவும்.
3)உண்மையும் இன்பமும்.
3)உண்மை, தெளிவு, இன்பம் என்பன.

38. இப்பாடலில் பொது மொழியாக வரும் சொல்,
1)உள்ளம். 2)கவிதை. 3) உருவம். 4) உண்மை.

39. கவிஞன் தனது கருத்தை இயற்கை நிகழ்ச்சி ஒன்றின் மீது ஏற்றிக் கூறுவது,
1)உயர்வு நவிற்சியணி. 2)உருவக அணி.
3)தற்குறிப்பேற்ற அணி. 4)தன்மை நவிற்சியணி.

40. பின்வரும் வாக்கியங்களை ஒரு ஒழுங்கில் வைக்கும்போது பொருட் சிறப்புப் பொருந்திய பந்தியாக அமையும். அவ்வாறான வைப்பு முறையாக வருவது,
அ) இந்தியாவில் முதன்முதலாக "கார்டூன்" என்பதை அறிமுகப்படுத்தியவர் கவிஞர் பாரதியார் ஆவார்.
ஆ) "கார்டூன்" என்பது கேலிச்சித்திர வடிவமைப்பாகும்.
இ) "இந்தியா" என்ற பத்திரிகையில் வெளிவந்தவை அன்றைய இந்திய சமூக அரசியல் சூழலைப் பிரதிபலிக்கும் கார்டூன்களே.
ஈ)இதனால் கார்டூன் சித்திரங்களை பொதுமக்களுக்கு அறிய வழிவகுத்தார் பாரதியாரே.
உ)இவர் "இந்தியா" என்ற பத்திரிகையின் ஆசிரியராக விளங்கினார்.
1) ஆ, அ, உ, இ, ஈ. 2)ஆ, இ, உ, ஈ, அ.
3) இ, உ, ஈ, அ, ஆ. 4)ஈ, அ, இ, உ, ஆ.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

| T | |
|---|---|
| 22 | II |

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II
## Tamil Language & Literature - II

Cµsk ©ozv¯õ»®
Two hour

### பகுதி - 01

01.குறு வினாக்கள் யாவற்றுக்கும் விடை எழுதுக.

01)செவ்வி ஒன்றைக் காண்பவர் கொண்டிருக்கவேண்டிய பண்புகள் எவை?

02)பாடசாலை வரலாறு ஒன்றை எழுத முற்படுபவர் கவனிக்க வேண்டிய பிரதான விடயங்கள் எவை?

03)பாடசாலைகளில் சஞ்சிகைகள் எழுதுவிப்பதன் பயன்கள் சில தருக.

04)உரைப் பகுதியொன்றினை கிரகித்து வாசிக்கும்போது வாசகர் செய்யவேண்டிய விடயங்கள் தருக.

05)சிறந்த சிறுகதையின் பண்புகளாகக் கொள்ளக்கூடியவை யாவை?

06)சுவரொட்டியின் பயன்பாடுகள் மூன்று தருக.

07)அணிகளில் தாயணி எனப்படுவது எதனை? அதன் கூறுகளைத் தருக.

08)"ஏன் புள்ளை அந்தக் காணிச் சங்கதியை இன்டைக்கு முடிப்பமே! நல்ல நாள்!" இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

09)"குன்றுங் குழியும் குறுகி வழி நடந்து
சென்று திரிவ தென்றுந் தீராதோ"
இப்பாடலைப் பாடியவர் யார்? இதிலுள்ள எதிர்ச் சொற்களைத் தருக.

10)கூட்டுப் பெயர் எவ்வாறு உருவாகிறது என உதாரணம் தந்து எழுதுக.

### பகுதி - 02

02.பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு எழுதுக. பொருத்தமான சட்டகம் அமைத்துத் தலைப்பும் இடுக.

அ)கல்வி மனிதனின் உரிமைகளில் ஒன்றாகும். இதனை மாந்தர் கற்குந்தோறும் கற்குந்தோறும் மாண்புறுவர். இக் கல்வியை முதன்முதலில் தாய்மொழியில் கற்பதுதான் சுமையற்றதாக அமையும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகவுள்ளது தாய்மொழிக்கல்வியின் மகத்துவத்தைப்பற்றி நீர் கருதுபவற்றை ஒரு விளக்கக் கட்டுரையாக எழுதுக.

ஆ)வெகுசனத் தொடர்பு சாதனங்கள் பல்வேறு வடிவங்களிலும் அளவுகளிலும் உலகெங்கும் பரவலாகக் காணப்படுவதற்குக் காரணம் அறிவியல் வளர்ச்சியின் போக்கே எனக் கூறலாம். இதற்கு அறிவியல் மேதைகளின் ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்கள் உந்துசக்தியாக விளங்குகின்றன. உலக நாடுகள் பல அறிவியல் வளர்ச்சிக்காகப் பெரும் பணத்தை முதலிடுகின்றன. இந்த வகையில் அறிவியல் விருத்தி சார்பாக ஒரு விவரணக் கட்டுரை வரைக.

இ) இலக்கியங்கள் பல்வேறு வடிவங்களில் அச்சடிக்கப்பட்டும் கணினி மயப்படுத்தப்பட்டும் பெருகிவருவது விருப்புக்குரியதும் வியக்கத்தகுந்ததுமாகும். இவ்விலக்கியங்கள் கூறும் உண்மைகள், தத்துவங்கள், அனுபவங்கள், சுவைகள், உணர்வுகள் போன்றவற்றை அறிந்து கொள்ள அவ்விலக்கியங்களைத் தேர்ந்து வாசிக்கவேண்டிய தேவை மக்களுக்குண்டு. வாசிப்புத்திறன் குறையுமாயின், அதுவும் மாணவர் மத்தியில் குறையுமாயின் அது கவலைக்குரியதொன்றெனலாம்.எனவே, வாசிப்பின் அவசியத்தை வலியுறுத்தி மாணவர் மத்தியில் நீர் ஆற்றும் சொற்பொழிவு.

ஈ)"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை" என்ற பழமொழிக்கேற்ப ஒரு கற்பனைச் சிறுகதை.

உ)படித்த இளைஞர்கள் பலர் தொழில் தேடி அலையும் வேளையிலும், ஓய்வுபெற்ற பின்னும் தொடர்ந்து பதவிகளில் பணிபுரியும் முதியவர்கள் பலர் இன்று காணப்படுகின்றனர். இவ்வாறு [illegible] நன்மைதரும் என்று ஒருவரும், பல தீமைகளைத் தரும் என்று இன்னொருவரும் நிகழ்த்தும் உரையாடல்.

(9ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

03.பின்வரும் பந்திகளை வாசித்து அவற்றின் சாராம்சங்களை 15 - 20 சொற்களில் சுருக்கி எழுதுக.

அ) உலகமென்ற நாடகமேடையில் நடிகர்களாய் விளங்குபவர் மானுடர். இம் மானுடரை எதிர்க்கும் இரு எதிரிகளாக பயமும் கவலையும் விளங்குகின்றன. பயம் உய்யவிடாத வியாதி. கவலை வாழ்வை அரித்துச் சிதைக்கும் நோய் என்றும் கூறலாம். இவையே மனித வாழ்வை நரகமாக்கி விடுகின்றன. இவை சூழ்ந்திருப்பவர்களையும் துயரில் ஆழ்த்தி விடும். பயமும் கவலையும் பீடிக்கப்பட்ட மக்கள் பலர் நம் மத்தியில் இருக்கின்றனர். இவர்களிடம் எளிய விடயங்களைப் பற்றிக் கூறினாலும், அவர்கள் நாம் எதிர்பாராத வகையில் அபாயங்களை நம்முன் பயத்துடன் செய்துவிடுவார்கள். இவர்களிடம் சந்தேகம் அதிகம் .இவர்கள் தம்மைத் தாமே ஒரு பெரிய மதிற்சுவர் அமைத்து அதனுள் அடங்கிவிடுவார்கள்.

ஆ) கிராம வாசிகள் எல்லோரும் ஒற்றுமையாகவும், ஒரு குடும்பம் போலவும் வாழ்கின்றனர். கைத்தொழில்களிலும் ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்கின்றனர். வேற்றுமையும், பொறாமையும்பேராசையும் எட்டிப்பாராத இடம் நாட்டுப்புறம்தான். கிராம வாழ்வே எளிய தூய வாழ்விற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. நகர வாழ்வு ஆடம்பரமானது. கிராமிய வாழ்வில் அமைதியும் இன்பமும்நிறைந்துள்ளன. நாட்டுப்புறங்களில் ஏற்ற ஏட்டுக்கல்வி கிடையாது என்பது உண்மையேயானாலும், ஏட்டுக்கல்வியால் கிடைக்காத அறிவுகள் நிறையக் கிடைக்கின்றன. நேரில் எப்பொருளையும் பார்த்துத் தெரிந்துகொள்ளும் இயற்கை அறிவு தாராளமாகக் கிடைக்கின்றது.

04.பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு பூரணமான விடைதருக.

அழகு பற்றிய தேடல் மெய்யியலிலும், உளவியலிலும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. மனிதரது அறிகைச் செயற்பாடு என்ற வகையிலும் மனவெழுச்சி வடிவம் என்ற வகையிலும் அழகு நோக்கப்படுகின்றது. அழகு பற்றிய கருத்தாடல்கள் தொன்மையான கிரேக்கச் சிந்தனைகளிலே தோற்றம் பெற்றுவிட்டன. அழகு என்பதன் பொதுவான கருத்து மனித உள்ளங்களிலே காணப்படுவதன் காரணமாகவே ஒரு பொருளை அழகு என்றும், அழகற்றது என்றும் மனிதரால் இனங்காணப்படுகின்றது என்று பிளேட்டோ குறிப்பிட்டுள்ளார். உலக பொருள்களுக்கெல்லாம் முன் ஏற்பாடாகக்கருத்துத் தோற்றம் பெற்றுவிட்டதென்பது எண்ண முதல்வாதத்தின் முன்மொழிவாகும். பொருளுக்கு முந்தியதே கருத்துக்களும் எண்ணங்களும் தோற்றம் பெற்றுவிட்டன. கருத்துக்கள் பூரணத்துவமும் நிறைவும் கொண்டவை. மூலக்கருத்துக்கள் முழுமை பெற்ற வடிவங்கள் ஆகின்றன. அழகு என்பது மூலக்கருத்தைப் பிரதிபலித்துக் காட்டுதலாகும் எனப் பிளேட்டோவின் கருத்துக்கள் அமைகின்றன. அதேவேளை போலியான பாவனைகளை மேற்கொள்ளும் அழகியற்செயற்பாடுகள் அவரது கண்டனங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. எனினும், பிளேட்டோவின் கருத்துக்கு மாறுபாடான கருத்துகளை அழகியல் சார்ந்த தொடர்பில் அரிஸ்ரோட்டில் வெளிப்படுத்தியுள்ளார். இந்திய மரபில் அழகு பற்றிய அறிமுறைகளைத்தரும் நூலாக பரதமுனிவரின் நாட்டிய சாஸ்திரம் அமைந்துள்ளது. அழகை உருவாக்கும் கலைகள் சிருஸ்காரம், ஹாஸ்யம், அவலம், சினம், வீரம், அச்சம், அருவருப்பு, அற்புதம் என ஒன்பதினைப் பரதமுனிவர் கூறியுள்ளார்.

1) இப் பந்தியில் உரையாசிரியர் கூறும் பிரதான விடயம் எது பற்றியதாகும்?
2) அழ்கு எவ்வெவ் வடிவங்களில் நோக்கப்படுகிறது?
3) ஒரு பொருளை அழகானது, அழகற்றது என மனிதர் கூறுவதற்குக் காரணம் யாதென பிளேட்டோ கூறுகிறார்?
4) எண்ண முதல் வாதத்தின் முன்வைப்பு எதுவெனக் கூறப்பட்டுள்ளது?
5) கருத்துக்கள், மூலக்கருத்துக்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைத் தருக.
6) பிளேட்டோவின் கண்டனக் கருத்துக்குள்ளாக்கப்பட்ட விடயங்கள் எவை?
7) 1) பரதமுனிவர் கூறிய கலைகள் ஒன்பதையும் உறுப்பாக எழுதுக.
2) பின்வரும் சொற்களுக்கு அரும்பதங்கள் தருக.
1. ஹாஸ்யம். 2.அழகு. 3.போலி.

05.பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

அ) உமது பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழா ஒன்றின் நிகழ்வுகள் பற்றிய ஓர் அறிக்கை.

அல்லது

ஆ) வெளிநாட்டு மோகத்தில் ஆழ்ந்து பாடசாலைக்கால வாழ்வை வெறுத்து நடக்கும் ஒரு நண்பனுக்கு அறிவுரை கூறும் வகையில் ஒரு கடிதம்.

ஆசிரியர் - திருமதி G.யோகேஸ்வரன் (I.S A.)
ACA கல்வி நிலையம் திருமலை.


உங்கள் அபிமான உதயன் கல்விச்சுடரில் மாணவர்களுக்கான விசேட வெளியீடுகள்

தரம் 5 மாணவர்களுக்கு வியாழக்கிழமைகளில் 2009ஆம் ஆண்டுக்கான தயார்ப்படுத்தல் பரீட்சைத்தொடர்

A/L மாணவர்களுக்கு: வெகு விரைவில்

அனைத்துப்பாடங்களையும் உள்ளடக்கி கொழும்பு, யாழ்.கண்டி, திருமலை ஆகிய மாவட்டங்களோடு ஏனைய மாவட்டங்களையும் சேர்ந்த பிரபல ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட மாதிரிவினாத்தாள்கள், கற்றல் குறிப்புக்களைத் தாங்கிவரும் தனியான வெளியீடு.

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள முகவரிடம் இன்றே முற்பதிவு செய்து கொள்ளுங்கள்

கல்விச்சுடர் தொடர்பான மேலதிக் தகவல்களுக்கு:-

ஆசிரியர், உதயன் - கல்விச்சுடர்,
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : newkalvisudar@yahoo.com.
தொலைபேசி: 021-2229933, 021-2228310
0716850005 ./ 0714273035
தொலைநகல்: 021-2229944



யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம்
கரவெட்டி

மதிப்பளித்தல் நிகழ்வு - 2008

பிரதம விருந்தினர் - திரு.செ.உதயகுமார் (பிரதிக் கல்விப் பணிப்பாளர்,வடமராட்சி)
சிறப்பு விருந்தினர் - திரு.சி.சிறீகாந்தன் (நிறைவேற்றதிகாரி,இலங்கை வங்கி, நெல்லியடி)
காலம் - 22.11.2008 சனிக்கிழமை காலை 9 மணி


பா.வினோஜன்
தமிழ்த்தினப் போட்டி -2007
ஆக்கத்திறன் வெளிப்பாடு - தேசிய மட்டம் - முதலாம் இடம்


கு.நிதுஷா
தமிழ்த்தினப் போட்டி -2008
ஆக்கத்திறன் வெளிப்பாடு - மாகாண மட்டம் - முதலாம் இடம்


ம.துஷிதா
தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டி வெள்ளிப் பதக்கம்
தமிழ்த்தினப் போட்டி -2007
வாசிப்பு - மாகாண மட்டம் -இரண்டாம் இடம்

புலமைப் பரிசில் பரீட்சை - 2008 சித்தியடைந்தோர்


சு.திலக்ஷன்


சு.சஞ்சீவன்


ம.கவியரசன்


ஜெ.நிஷோபா
தமிழ்த்தினப் போட்டி -2008
வாசிப்பு - மாகாண மட்டம் - மூன்றாம் இடம்


சு.அச்சுதன்


சி.சுமணன்


த.கஜீதா


த.கோகுலன்


சி.தேவகி


கோ.[illegible]

இச் சாதனையாளர்களுடன் பாடசாலை ரீதியிலும், கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களிலும் நடைபெற்ற போட்டிகளில் சிறந்த சாதனையாளர்களாகப் பரிசில் பெறும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

# புலமைப் பரிசில் பரீட்சை 2008

# சித்திபெற்ற மாணவ மணிகள்

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாதனை படைத்த 50 மாணவர்களையும் 80 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களின் வெற்றிக்குத் தம்மை அர்ப்பணித்து சேவை ஆற்றிய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் உதவிபுரிந்த கல்விசாரா ஊழியர்கள், பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் எமது மன மார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.



01. பா.வாசவன் 154 | 02. க.சிவதீபன் 153



03. பா.திவியா 146 | 04. ம.கேமகாந் 144 | 05. சி.சாரங்கன் 144 | 06. கௌ.கேதீஸ்வரன் 143 | 07. கே.குகோன் 139 | 08. க.நிரோஜா 138 | 09. இ.மதுஷா 138 | 10. சி.அனோஜன் 137



11. ச.தனுசன் 137 | 12. வ.சிவகரன் 135 | 13. லோ.லக்சிகா 134 | 14. சு.லக்சன் 133 | 15. செ.சுதர்சன் 132 | 16. அ.எட்றின் ஹூட் 131 | 17. சு.மதுசா 131 | 18. ச.சங்கீர்தா 131



19. த.லௌசிகா 131 | 20.வி.தர்மிகா 128 | 21. இ.செந்தூரன் 128 | 22. ம.நாகும் பிரதீப் 127 | 23. ஸ்ரீ.நிதுஷாந் 127 | 24. வி.சாரங்கா 127 | 25. நே.புவேந்திரா 126 | 26. உ.மாதவி 125



27. கி.சேயோன் 124 | 28. இ.சிவாணி 123 | 29.இ.ஆரதி 123 | 30. ச.கனிமொழி 122 | 31. ச.தாரணி 122 | 32.பா.தாட்சாயினி 121 | 33. சி.அபிநயா 121 | 34. மோ.கிருதிகா 121



35. ம.பிரியந்தன் 121 | 36. லி.பிரணவபவன் 120 | 37. பா.கஜலக்ஷன் 120 | 38. பு.டிலக்ஷன் 120 | 39. தி.ஸ்ரீகிருஷ்ணன் 120 | 40. ர.ஜெயமயூரி 120 | 41. த.துசீபன் 118 | 42. ப.ஜீவனா 118



43. க.மைதிலி 117 | 44. த.விஸ்ணவி 116 | 45. இ.லஸ்மியா 116 | 46. ர. விதுஷா 116 | 47. ச.சாத்வீகசர்மா 115 | 48 சி.சாரங்கன் 115 | 49. பி.போல்வெவிஸ்ரன் 114 | 50. பா.சாயித்தியா 114

**இம் மாணவர்களைக் கௌரவிக்கும் பாராட்டுவிழா நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை (21.11.2008) பாடசாலை சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் முற்பகல் 10மணிக்கு நடைபெறவுள்ளது.**

பிரதம விருந்தினர் : திருமதி அருளேஸ்வரி வேதநாயகம்
(வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்வலயம்)

சிறப்பு விருந்தினர்: செல்வி ஞா.ஞானலோஜினி
(பழைய மாணவி, சட்டத்தரணி)

**பாடசாலைச் சமூகம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 வயது அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டம்; மானிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியன் சுவீகரித்தது

## மத்திய கல்லூரி - 2ஆம் இடம், தேவரையாளி - 3ஆம் இடம்



வலி.வடக்கு,நவ.21

இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் ஈ.எஸ். பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியனாகியது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும், யாழ்.மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமானது முதல் இரு அணிகளும் கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டதுடன் கோல் கம்பங்களை நோக்கி மாறிமாறி பந்துகளைச் செலுத்தினார்கள். பல சந்தர்ப்பங்கள் சாதகமாகக் கிடைத்தபோதும் இரு அணிகளும் அவற்றைத் தவறவிட்டன.

முதல்பாதி ஆட்டம் நிறைவு பெறுவதற்கு நான்கு நிமிடங்கள் இருக்கையில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் வலது முன்னணி வீரன் ஒருவர் கோல் கம்பத்தை நோக்கித் தூக்கியடித்த பந்தைப் பெற்ற இந்துக் கல்லூரியின் மற்றொரு முன்னணி வீரர் எஸ்.அகிலன் கோல் கம்பத்துக்குள் செலுத்தி ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார். இந்நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் இரு அணியினரும் எதிரணியினர்களின் கோல் கம்பங்களை மாறி மாறி ஆக்கிரமித்தபோதிலும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

இந்நிலையில் ஆட்டம் முடிவுற்றதும் மானிப்பாய் இந்துக்கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் யாழ்.மத்திய கல்லூரியை வென்று யாழ்.மாவட்ட சம்பியனாகியது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியும் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டன. இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல்கணக்கில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையை வென்று 3ஆம் இடத்தைப் பெற்றது. (50-86)

# இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு,நவ.21

யாழ்.உதைபந்தாட்ட லீக் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 4 மணிக்குக் குருநகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதும். (50-86)

# பட்மின்ரனில் தங்கப்பதக்கம்



மாகாண மட்ட பட்மின்ரன் போட்டியில் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய வீரர்களான லோ.றெமின்சன், ம.விஜிந்தன், தி.துஷ்யந்தன், த.அஜீபன் மற்றும் வீராங்கனைகளான ச.பெனிஸ்லா, ஜெ.நிலர்சியா, தி.நிசாந்தினி ஆகியோர் தங்கப்பதக்கங்களை வென்றனர். பாடசாலை அதிபர் பா.பாலச்சந்திரன், பொறுப்பாசிரியர் இ.றூபி ஆகியோருடன் அவர்கள் எடுத்துக்கொண்ட படம் இது. (50-11)

# தீவக வலய மட்ட உதைபந்தாட்டம்; வேலணை மத்திய கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம்,நவ.21

தீவக வலயப் பாடசாலைகளின் 14 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், வேலணை மத்திய கல்லூரி அணி சம்பியனாகியது.

இறுதியாட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணியும் ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி அணியின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்பட்டது. சென்.அன்ரனீஸ் அணி தடுப்பு ஆட்டத்தில் ஈடுபட்டு வேலணை மத்திய கல்லூரி அணியின் கோல் போடும் முயற்சிகளைத் தடுத்தது. எனினும் தனக்குக் கிடைத்த வாய்ப்பு ஒன்றைக் சரியாகப் பயன்படுத்திய மத்திய கல்லூரி அணி முதல் கோலைப் போட்டது. 1:0 என்ற கோல் கணக்கில் முதல்பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பரஸ்பரம் பந்தை நகர்த்திக் கோல் பெறும் முயற்சியில் ஈடுபட்டன. எனினும் அது முடியவில்லை. ஆட்ட நேரமுடிவில் வேலணை மத்திய கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் சென்.அன்ரனீஸ் அணியை வென்று சம்பியனாகியது. (50-325)

# மகாஜனக் கல்லூரி நடத்திய சதுரங்கப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,நவ.21

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி கல்லூரி சதுரங்க விளையாட்டுக்கழகம் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடத்திய சதுரங்கப் போட்டிகளில் கோட்ட ரீதியாகச் சிறப்புப் பரிசுகளைப் பெறுபவர்களின் விவரங்கள் வருமாறு:

- *11 வயதுப் பிரிவு (ஆண்)* - சி.கிருசிகன் (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி).
- *13 வயதுப் பிரிவு (ஆண்)* - தே.துவாரகன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).
- *13 வயதுப் பிரிவு (பெண்)* - ப.பிரலக்சிகா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி).
- *15 வயதுப் பிரிவு (ஆண்)* - வ.கஜன் (சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை).
- *15 வயதுப் பிரிவு (பெண்)* - கி.சஞ்சிகா (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி).
- *17 வயதுப் பிரிவு (ஆண்)* - கு.சுமன் (சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி).
- *17 வயதுப்பிரிவு (பெண்)* - ம.லக்சனா (மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி), சி.நிரஞ்சனா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), நீ.சுகேனியா (பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்கப் பாடசாலை).

(50-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

# மகாஜனக் கல்லூரியைத் தோற்கடித்து சம்பியனாகியது அளவெட்டி அருணோதயா

## காங்கேசன்துறை நடேஸ்வரா மூன்றாம் இடம்



வலி.வடக்கு,நவ.21

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி சம்பியனாகியது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது அபாரமான ஆட்டத்தினை வெளிப்படுத்தின. எனினும் கோல்கள் எவையும் பெறப்படாத நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவுற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாகி இருந்தது. கோல்களைப் பெறுவதற்கு இரு அணிகளின் வீரர்களும் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டனர்.

ஆட்டம் முடிவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கையில் அருணோதயாக் கல்லூரி முன்னணி வீரர் தனக்கு கிடைத்த பந்தை மிகவும் சாதுரியமாக கோல் கம்பத்துக்குள் செலுத்தி முதலாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

மகாஜனக் கல்லூரி தன்னைச் சுதாகரித்துக்கொண்டு விளையாட முயன்றபோதிலும் வேகமாக விளையாடிய அருணோதயாக் கல்லூரி மீண்டும் ஒரு கோலைப் பெற்று தமது வெற்றியை உறுதிப்படுத்திக்கொண்ட நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் மகாஜனக் கல்லூரியை வென்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் மோதிக்கொண்டன. இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் நிறைவு பெற்றது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

(50-86)




வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனாகியது.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் கல்விப்பணிப்பாளர் எ.தனபாலசிங்கம் வெற்றிபெற்ற இந்துக் கல்லூரி அணித்தலைவரிடம் வெற்றிக்கேடயத்தை வழங்குவதையும் வெற்றியீட்டிய அணிவீரர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு
## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 16 . 07 . 1950



உதிர்வு 21 . 11 . 2007

### அமரர் சின்னத்தம்பி யோகராசா
(உரிமையாளர்- ராஜயோகம் அழகு மாடம், மிதிலா அழகு மாடம்)
திதி: துவாதசி (09.12.2008)

அன்பின் உறைவிடமாய்
உழைப்பின் சிகரமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
ஒளியை வழங்கியது
எமது அன்பு உள்ளம்
எம்மை விட்டுப் பிரிந்தாலும்
ஆறாது உங்கள் நினைவு
அழியாது உங்கள் பாசம்.

'மிதிலை', மணற்பகுதி, புத்தூர். (79978)
என்றும் உங்கள் நினைவுகளோடு: குடும்பத்தினர்.

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 23 . 08 . 1946



மறைவு 22 . 10 . 2008

அமரர்
### செல்லத்துரை தவலிங்கம்

கடந்த 22.10.2008 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப ஒளி விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.11.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இக்கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துவாளி வீதி,
இமையாணன், உடுப்பிட்டி. (சி/555381)
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தம்பிராசா நாமதேவன் (மகாதேவன்)
அன்னையின் மடியில் 05.07.1929
ஆண்டவன் அடியில் 23.10.2008

கண்ணா கண்ணா என்றழைத்து
கீதையை தினம் உச்சரித்து
கணப்பொழுதில் சென்றடைந்தீர்
கண்ணனின் பாதார விந்தம்
கலங்குகின்றோம் நாமிங்கு
கண்ணீரும் கம்பலையுமாய்.

நாளை (22.11.2008) சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோத்தியால் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
(சி/555380)
மருமக்கள்,
மகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

## சேது சமுத்திரப் பணிகளில் இலங்கை தலையிட முடியாது!
### அமைச்சர் டிலான் பேரேரா சொல்கிறார்

கொழும்பு, நவ.21

இந்தியாவால் மேற்கொள்ளப்படும் சேது சமுத்திர அகழ்வுப் பணியை இலங்கையால் தடுத்து நிறுத்த முடியாது என்று துறை முகங்கள் அபிவிருத்தி அமைச்சர் டிலான் பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல விடைக்கான நேரத்தில் ஐ.தே. கட்சி எம்.பி.ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

சேதுசமுத்திர அகழ்வுப் பணியால் இலங்கைக்கு ஆபத்து ஏதும் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்றும் இது தொடர்பான அரசின் நிலைப்பாடு என்ன என்றும் ரவி கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த டிலான் பெரேரா மேலும் கூறியவை வருமாறு:

சேதுசமுத்திர அகழ்வுப் பணியை இந்தியா மேற்கொண்டு வருகிறது. இந்தியாவுக்கே சொந்தமான இந்தப் பணியை எம்மால் தடுத்து நிறுத்தமுடியாது.

ஆனால் அந்தத் திட்டத்தால் எமது நாட்டுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் நாம் நடவடிக்கை எடுக்கவேண்டியது கட்டாயம். இலங்கை அரசு அந்த நடவடிக்கையை சரிவர மேற்கொள்ளும்.

இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதன் மூலம் எமது நாட்டுக்கு நன்மை கிட்டும். இது தொடர்பில் நாம் மிக அவதானத்துடன் இருக்கின்றோம் - என்றார். (அ-சி)

## கசிப்பு வைத்திருந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், நவ.21

கசிப்பு வைத்திருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் நுணாவில் மேற்கைச் சேர்ந்த தந்தை, மகன் ஆகிய இருவரும் கசிப்பு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி கடந்த ஐந்தாம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரும் நேற்று முன்தினம் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் தந்தைக்கு 70 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 25 மாதம் சாதாரண சிறைத்தண்டனையும்-

மகனுக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 18 மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதித்தார்.

(202-207)

## செம்மணி இந்து மயானத்திற்கு வண்டில் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.21

பாலஷம்ரட்ஸணா சமூக நலனோம்பு மன்றத்தினர் இறந்தவர்களின் பூதவுடல்களை எடுத்துச் செல்வதற்கான செம்மணி இந்து மயானத்திற்கு நாற்சக்கர வண்டில் ஒன்றை மயான அபி விருத்திச் சபையிடம் அன்பளிப்பாக வழங் கியுள்ளனர். சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் இந்த வண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வண்டில் ஜனவரி மாதமளவில் சேவைக்கு விடப்படும் என குறிப்பிடப்படுகிறது. அந்தியேட்டிக்கிரியைகள் செய்வதற்கு நிரந்தரக் குருக்கள் ஐயா ஒருவரும் செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையுடன் இணைந்துள்ளதாக மேற்படி அபிவிருத்திச் சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(204)


### விற்பனைக்கு
எமது ஸ்தாபனத்தில் தச்சு வேலைக்குரிய பாட்டு வாள் விற்பனைக்கு உண்டு.
தொ.பே.: 222 2564
இல.9, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (80051)

### விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் ஒன்றும், 14 inch colour T.V. ஒன்றும், மரவள்ளி சீவும் மெசின் ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: தொ.பே.: 077 4210023
STR Computer Service
(79996)





## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 12 . 06 . 1924



ஆண்டவன் மடியில் 22 . 10 . 2008

### திருமதி தவமலர் பொன்னையா

கடந்த 22.10.2008 புதன்கிழமை இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவியின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி மூலம் தமது அனுதாபங்களைத் தெரிவித்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சந்திக்கருகில்,
கோப்பாய் வீதி, உரும்பிராய். (79998)
குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 09 . 11 . 1946



மறைவு 22 . 10 . 2008

### திருமதி சாரதாமணி பாலசுப்பிரமணியம்
(நயினாதீவு)

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியோருக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வழங்கியவர்களுக்கும், மலர்மாலை, மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தியோருக்கும், அஞ்சலி உரைகளை நிகழ்த்தியவர்களுக்கும் மேலும் பல்வேறு உதவிகளை வழங்கியவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (21.11.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

4ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (79986)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவம் முன்னேறிச் செல்லும் ஒவ்வொரு காலடியும் புதைகுழியாக மாறும்!



## தமிழீழ உரிமைப் போரை நசுக்கும் யுத்தத்தை இந்தியாவே இயக்குகின்றது என ஆவேசமாகக் குமுறுகிறார் வைகோ

சென்னை, நவ. 21

ஈழத்தை நோக்கி முன்னேறிச் செல்லும் இலங்கை இராணுவத்தினர் வைக்கும் ஒவ்வொரு அடியும் மிக விரைவில் புதைக்குழியாக மாறும்.

தென்றலையும் புயலாக மாற்றும் ஆற்றல் கொண்ட விடுதலைப் புலி வேங்கைகளைத் தோற்கடிக்க முடியாது. அவர்கள் புயலாக எழுந்து சிங்களப் படைகளுக்கு கல்லறை கட்டுவார்கள். தமிழீழம் அமைவதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

- இவ்வாறு தமிழகத்தின் பழுத்த அரசியல் வாதியும், ஈழத் தமிழ் ஆதரவாளரும், ம.தி.மு.க. பொதுச்செயலாளருமான வைகோ ஆவேசக் குமுறலுடன் முழக்கமிட்டுள்ளார்.

மேலும், இலங்கையில் தமிழீழ உரிமைப் போராட்டத்தை நசுக்க இந்திய அரசுதான் போரை இயக்கி வருகிறது. ராடர்கள், நிதியுதவிகளை அளித்து தமிழர்களுக்குத் துரோகமிழைக்கிறது. ஈழத்தில் தமிழரின் இரத்த ஆறு ஓடுவதற்கு மத்திய அரசும் பிரதமருமே பொறுப்பேற்க வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்தும், அங்கு போரை நிறுத்தக் கோரியும் ம.தி.மு.கவினர் சென்னை சேப்பாக்கம் அரசினர் விருந்தினர் இல்லம் அருகே புதன்கிழமை உண்ணாவிரதம் மேற்கொண்டனர். உண்ணாவிரதத்தில் இறுதியாக வைகோ பேசியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவில்லையெனில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியைச் சந்திப்போம் என்று பிரதமர் மன்மோகன் சிங்கை, முதல்வர் கருணாநிதி எச்சரித்திருக்க வேண்டும்.

உடனே டில்லி சென்று பிரதமரைச் சந்தித்து நடவடிக்கை எடுக்க முதல்வர் முயன்றிருக்க வேண்டும். தீர்மானத்துக்கு பதில் நடவடிக்கை என்ன என்று கேட்டிருக்க வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கவில்லையெனில் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் ரீதியாக படுதோல்வியைச் சந்திப்போம் என்று பிரதமரை எச்சரித்திருக்க வேண்டும். ஆனால், கருணாநிதி இதைச் செய்யவில்லை. இவ்விடயத்தில் தமிழக மக்கள் கொந்தளித்துப் போயுள்ளனர்.

தமிழ் ஈழ உரிமைப் போராட்டத்தை நசுக்க இந்திய அரசுதான் போரை இயக்கி வருகிறது. ராடர்கள், நிதியுதவிகளை அளித்து வருவது துரோகச் செயல். இது முதல்வருக்குத் தெரியாதா?

ஈழத்தில் தமிழன் சிந்தும் ரத்தத்துக்கு மத்திய அரசு தான் பொறுப்பேற்க வேண்டும். ஈழத்தில் முன்னேறிச் செல்லும் இலங்கை இராணுவத்தினர் வைக்கும் ஒவ்வொரு அடியும் புதைக்குழியாக மாறும். தென்றலையும் புயலாக மாற்றும் ஆற்றல் கொண்ட விடுதலைப் புலி வேங்கைகளைத் தோற்கடிக்க முடியாது. அவர்கள் புயலாக எழுந்து சிங்களப் படைகளுக்கு கல்லறை கட்டுவார்கள். தமிழீழம் அமைவதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

போரை நிறுத்த, மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க., தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் ராஜிநாமா செய்து மத்திய அரசுக்கு நெருக்கடி ஏற்படுத்த வேண்டும். இதன் மூலம் நெருக்கடியைப் புரிந்து கொண்டு மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும். தி.மு.க. எம்.பிக்கள் ராஜிநாமாச் செய்தால் அதன் தலைவர் கருணாநிதிக்கு மலர் மாலை அணிவித்து பாராட்டுத் தெரிவிப்பேன். ம.தி.மு.க. எம்.பிக்கள் ராஜிநாமாச் செய்வதால் எவ்வித லாபமும் கிடையாது - என்றார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு, வைகோவுக்கு பழரசம் கொடுத்து போராட்டத்தை முடித்து வைத்தார்.

# தனுஷ்கோடியில் இலங்கைப் படகு;

இராமநாதபுரம், நவ. 20

இலங்கைப் பகுதியைச் சேர்ந்த படகு ஒன்று செவ்வாய்க்கிழமை இரவு தனுஷ்கோடி அருகே கம்பிப்பாடு கடற்கரைப் பகுதியில் கரை ஒதுங்கியதால் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளனரா என்று உளவுப் பிரிவுப் பொலிஸார் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்.

படகிலிருந்த 2 என்ஜின்களும் கழற்றப்பட்டு, வெறும் படகை மட்டும் நிறுத்திவிட்டு படகில் வந்தவர்கள் தப்பியிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

எனவே, படகில் வந்தவர்கள் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில், தமிழக கடலோரப் பகுதி முழுவதும் உளவுப் பிரிவு பொலிஸார் உட்பட உள்ளூர் பொலிஸாரும் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

# ஈழத் தமிழர் படுகொலைக்கு முடிவு கட்ட முதல்வர் முன்வந்தால் படைதிரட்டிக் களமிறங்க நாம் தயார்

## டாக்டர் ராமதாஸ் முழக்கம்

அம்பத்தூர், நவ.21



ஈழத் தமிழர் படுகொலைக்கு முடிவு கட்ட, தமிழக சட்டசபை சிறப்புக்கூட்டத்தை கூட்டி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். நாடு முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழகத்திலும், டில்லியிலும் அரசியல் மாநாடுகளை நடத்த வேண்டும். இதைச் செய்ய முன் வந்தால் அவர் பின்னால் படை திரட்டி அணி வகுத்து நிற்க நாம் தயார்.

- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் முழக்கமிட்டுள்ளார்.

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து, பா.ம.க. சார்பில் வில்லிவாக்கம் பஸ் நிலையத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

''ஈழத் தமிழர்கள் இலங்கைக்குப் பிழைக்கச்சென்றவர்கள் அல்லர். அந்த மண்ணின் மைந்தர்கள். 30 வருடங்களாக உரிமைக்காகப் போராடி வரும் அவர்களை ஆதரிப்பதும், காப்பாற்றுவதும் நமது கடமை. கடந்த 30 வருடங்களாக நடைபெற்றுவரும் போர் காரணமாக இரண்டரை லட்சம் தமிழர்கள் அகதிகளாக புலம் பெயர்ந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் அகதிகள் முகாம்களில் தங்கி உள்ள ஒரு லட்சம் அகதிகளின் நிலை சொல்லி மாளாது. தற்போது தமிழ்நாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக மிகப்பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. தமிழக முதல்வர் இந்த எழுச்சியைப் பயன்படுத்தி கொள்ளவேண்டும்.

22 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நாம், இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது. இதை நான் சொல்வதை விட முதல்வர் கருணாநிதி அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டும்.

போரை நிறுத்த முடியாது என்று மஹிந்த ராஜபக்ஷ, இந்திய மண்ணுக்கு வந்து சொல்லும் துணிச்சலை அவருக்கு யார் கொடுத்தது? இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். தமிழக முதல்வர் ஆட்சி பற்றிப் பயப்படக்கூடாது. தி.மு.க. வுடன் பா.ம.கவுக்கு கூட்டணி உறவு இல்லை என்றாலும், ஈழத்தமிழர் பிரச்சினையில் அவருடைய முடிவுக்குப் பின்னால் நிற்போம்.

இன்று கூட முதல்வருக்கு 'மாற்று வழிப் பாதை' என்ற நான்கு பக்கக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து இருக்கிறோம். அதை முழுமையாக தற்போது என்னால் வெளியிட முடியாது. சுருக்கமாகச் சொல்வது என்றால், உலகமெங்கும் குறிப்பாக அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக போராட்டம் நடத்துவதற்கு நமது முதல்வர் ஊக்கம் அளிக்க வேண்டும்.

அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி 'மாற்று வழிப்பாதை' பற்றி தீர்மானம் நிறைவேற்றி, பின்னர் தமிழக சட்டமன்றத்தின் ஒரு நாள் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி அந்தத் தீர்மானத்தை சட்டசபையிலும் நிறைவேற்ற வேண்டும். நாடு முழுவதும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாட்டிலும், டில்லியிலும் அரசியல் மாநாடுகளை நடத்த வேண்டும். ஆறரை கோடி மக்களின் முதல்வராக இருக்கும் கருணாநிதி இதைச் செய்ய முன் வந்தால் அவருக்குப் பின்னால் அணிவகுத்து நிற்கத் தயார் - என்றார்.

# ராஜீவ்காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை பிரபாகரன் ஏற்க மறுத்தமையே இன்றைய சிக்கலுக்குக் காரணம்

## தங்கபாலு தெரிவிப்பு

இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒருங்கிணைத்து முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, ஜெயவர்த்தனவுடன் செய்து கொண்ட அமைதி ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒப்புக் கொள்ளாதமையே இன்றைய பிரச்சினைக்குக் காரணம்.

மாறாக ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் அப்போதே நிறைவேற்றப்பட்டிருந்தால் இப்போது இலங்கையில் அமைதி ஏற்பட்டிருக்கும்.

- இவ்வாறு தமிழகக் காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு பேசினார்.


மறைந்த முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 92ஆவது பிறந்தநாள் நேற்றுமுன்தினம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசியபோதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினையில், காங்கிரஸ் கட்சியையும் அதன் நிலைப்பாட்டையும், மத்திய அரசையும் விமர்சிப்பவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இந்திரா காந்தி மட்டுமே இலங்கையில் இனப்படுகொலை நடக்கிறது என்று முதலில் உலகுக்கு எடுத்துக் கூறியவர். இலங்கையில் தமிழ் மக்கள் அழிக்கப்பட தொடங்கியபோது இந்திரா காந்தி விடுத்த கோரிக்கையை ஏற்று இலங்கைக்கு எதிராக உலகநாடுகள் திரண்டன.

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று 1982இல் ஜெயவர்த்தனவை டில்லிக்கு அழைத்த பெருமை ராஜீவ்காந்திக்கு உண்டு. அவரை மட்டுமல்ல அப்போதைய



இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் பிரபாகரனை அழைத்து தமிழர்களைக் காக்க முயற்சி எடுத்தார். இலங்கையில் வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒருங்கிணைத்து, ஜெயவர்த்தனவுடன் அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்.

ஆனால் அதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் ஒப்புக் கொள்ளவில்லை. இதுதான் இன்றைய இலங்கைப் பிரச்சினைக்குக் காரணம். மாறாக ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் அப்போதே நிறைவேற்றப்பட்டிருந்தால் இப்போது இலங்கையில் அமைதி ஏற்பட்டிருக்கும்.

நாம் தமிழக தலைவர்களின் உணர்வுகளை ஏற்கிறோம். ஆனால் மத்திய அரசைக் குறை கூறுவதால் ஒன்றும் நடக்காது. நாங்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்க முடியாது. ஆதரிக்கவும் மாட்டோம். ஒருபோதும் அவர்களை மன்னிக்க மாட்டோம். மறக்கவும் மாட்டோம். பிரபாகரன் மட்டுமல்ல, ஆயிரம் பேர் வந்தாலும் அதைப்பற்றி கவலைப்பட மாட்டோம்.

இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தமிழினத்தைக் கூறு கூறாக அழித்ததால்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதை அங்குள்ள தமிழர்களே சொல்கிறார்கள். இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய இயக்கங்களை அழித்தது விடுதலை புலிகள் தான்.

விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் அங்கீகாரம் பெற்ற அரசியல்கட்சிகளுக்கு நினைவிருக்கட்டும். தடை செய்யப்பட்ட இயக்கத்தை உங்களுக்கு ஆதரிப்பதற்கு தைரியம் இருந்தால் ஆதரித்துப் பாருங்கள். சட்டம் தன் கடமையைச் செய்யும். வன்முறையை ஆதரிப்பவர்களை நாங்கள் தொடர்ந்து எதிர்ப்போம்.

இலங்கையில் போர் மூலம் அமைதி திரும்பாது. அங்கு அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும். இந்தியாவில் இருப்பது போல, இலங்கை அரசுக்கு உட்பட்டு அங்கு தமிழர்களுக்கு ஆட்சியுரிமை வழங்க வேண்டும் - என்றார்.

முன்னதாக, யானைக்கவுனியில் உள்ள இந்திரா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்தும், சத்திய மூர்த்தி பவனில் இந்திரா காந்தியின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவியும் கே.வி.தங்கபாலு மரியாதை செலுத்தினார்.

# ரூ.26 கோடியைத் தொட்டது ஈழத் தமிழர் நிவாரண நிதி

ஈழத் தமிழருக்கான நிவாரண நிதியாக கடந்த 23 நாள்களில் 24 கோடியே 70 லட்சத்து 87 ஆயிரத்து 939 ரூபா குவிந்துள்ளது.


கடந்த ஒக்ரோபர் 28ஆம் திகதி முதல் நிவாரண நிதியை மக்கள் வழங்கத் தொடங்கினர். முதலாவதாக முதல்வர் கருணாநிதி தன் பங்காக தலைமைச் செயலாளர் ஸ்ரீபதியிடம் ரூ.10 லட்சம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் நிவாரணநிதி வழங்கினர்.

கடந்த 23 நாள்களாக நிவாரணநிதியை முதல்வர் கருணாநிதி வாங்கினார். இதுவரை 24 கோடியே 70 லட்சத்து 87 ஆயிரத்து 939 ரூபா நிவாரணநிதியாகக் குவிந்துள்ளது.

# போரை நிறுத்த ஐ.நா. சபையை இந்தியா வலியுறுத்த வேண்டும்

## ஜி.கே.மணி கோரிக்கை

கடலூர், நவ. 21



இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான போரை நிறுத்துமாறு ஐ.நா. சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் - என்று பா.ம.க. தலைவர் ஜி.கே.மணி தெரிவித்துள்ளார்.

கடலூரில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு-

இலங்கையில் தமிழினத்தைப் அடியோடு ஒழிக்க, இனவெறி பிடித்த மஹிந்த ராஜபக்ஷ அரசு மூர்க்கத்தனமாகச் செயற்பட்டு வருகிறது. பதுங்கு குழிகளில் தமிழர்கள் பட்டினி கிடக்கின்றனர்.

தமிழகத்திலுள்ள போராட்ட சூழ்நிலைகளை ஒருமுகப்படுத்த, முதல்வர் உடனே அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். மத்திய அரசை நிர்ப்பந்தப்படுத்த, அக்கூட்டத்தில் அனைத்துக் கட்சி தலைவர்களும் பங்கேற்க வேண்டும். தார்மீக, மனித உரிமை மீறல் அடிப்படையில், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிட வாய்ப்பு உள்ளது. 2000ஆம் ஆண்டில் கனடாவில் நடந்த ஐ.நா. மாநாட்டில் ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டு, 2001இல் அறிக்கை வெளியிடப்பட்டது.

பல மொழிகள், மதங்கள், பண்பாடுகள் கொண்ட நாட்டில், உரிமைகள் மறுக்கப்படும்போது, உரிமைக்காகப் போராடும் மக்கள் அண்டை நாட்டில் தஞ்சம் புகும் நிலை ஏற்பட்டால், அந்த நாடு ஐ.நா. சபையில் முறையிடலாம், அதில் ஆணையம் தலையிடும் என்று விதிமுறைகள் கூறுகின்றன. எனவே, ஐ.நாவிடம் போரை நிறுத்த இந்தியா வலியுறுத்த வேண்டும் - என்றார்.

# இலங்கைக் கடற்படை சிறைப்பிடித்த மீனவர்களை விடுவிக்கக் கோரி காரைக்காலில் வேலைநிறுத்தம்

காரைக்கால், நவ. 21

இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி, காரைக்கால் மீனவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

காரைக்கால்மேடு, கிளிஞ்சல்மேடு பகுதிகளைச் சேர்ந்த 13 பேர் கடந்த 17ஆம் திகதி கடலுக்குச் சென்றனர். இவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றுவிட்டனர் எனத் தகவல் வெளியானது.

இதையடுத்து கிராமப் பஞ்சாயத்துப் பிரதிநிதிகள் சிலர், தமிழக முதல்வர் கருணாநிதியைச் சந்திக்க நேற்றுமுன்தினம் புதன்கிழமை சென்னை சென்றனர்.

கடற்படையினரால் பிடித்துச் செல்லப்பட்ட மீனவர்களை மீட்கவும், இவர்கள் சென்ற 5 விசைப் படகுகளையும் மீட்டுத் தரவும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி, மாவட்டத்தில் உள்ள 11 கிராம மீனவர்கள் நேற்றுமுன்தினம் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால் சுமார் 500க்கும் மேற்பட்ட படகுகள் கரையில் நிறுத்தப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளியின் சுழலில் திணறியது சிம்பாப்வே முதல் போட்டியில் இலங்கைக்கு வெற்றி!

இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி நேற்று கராரேயில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதன்படி சிம்பாபவே அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அதன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக மஸகட்ஸா, சிபண்டா ஆகியோர் களமிறங்கினர்.

இருவரும் இணைப்பாட்டமாக தமக்கிடையே 28 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டனர். இந்நிலையில் சிபண்டா 9 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது குலசேகரவின் பந்துவீச்சில் கப்புகெதரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களம் புகுந்தவர் சிபாபா. அவர் மஸகட்ஸாவுடன் சேர்ந்து ஓட்டங்களைக் குவிப்பதில் முனைப்புக் காட்டினார்.

எனினும் எதிர்பாராத விதமாக மஸகட்ஸா, தரங்கவினால் ரண் அவுட் முறையில் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 40 ஆகக் காணப்பட்டது.

பின்னர் தைபு களமிறங்கினார். இவர் சிபாபாவுடன் கூட்டுச் சேர்ந்து ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். அணி 83 ஓட்டங்களைப் பெற்றநிலையில் சிபாபா 25 ஓட்டங்களுடன் மகரூபின் பந்தில் குலசேகரவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்து தைபுவுடன் இணைந்துகொண்டார் மற்சிகென்ஜெரி. இவர்கள் இருவரும் தமக்கிடையே 41 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த போது மற்சிகென்ஜெரி முரளிதரனின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த பின்வரிசை வீரர்கள் அனைவருமே ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் வந்த வரிசையிலேயே வேகமாக பெவிலியன் நோக்கி திரும்பினர். அவர்களை தொடர்ந்து அனுப்பிய வண்ணமிருந்தனர் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் மற்றும் அஜந்த மெண்டிஸ்.

மற்சிகென்ஜெரியின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து வந்தவர் சிக்கும்புரா. அவரும் முரளியின் பந்தில் எல்.பி.டபிள்யு முறையில் வெளியேற்றப்பட்டார். அடுத்து வந்த மருமாவும் முரளிதரனின் பந்தில் கப்புகெதரவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து அணித் தலைவர் உற்செய்யா வந்தார். அவர் அஜந்த மெண்டிஸின் பந்தில் எல்.பி.டபிள்யு முறையில் வெளியேற்றப்பட்டார்.

அவரைத் தொடர்ந்து பிறைஸ் களம்புகுந்தார், அவரும் மெண்டிஸின் பந்துவீச்சில் சங்கக்காரவினால் ஸ்ரொம்ப் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அவரின் பின்னால் முப்பரிவா இறங்கினார். அவரும் முரளியின் பந்தில் தரங்கவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இறுதியாக வந்தார் மொபியு இவரும் மெண்டிஸின் பந்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளிறேினார்.

அத்தோடு பங்களாதேஷின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. அப்போது தைபு ஆட்டமிழக்காமல் 35 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் முரளிதரன் 4 விக்கெட்டுக்களையும், மெண்டிஸ் 3 விக்கெட்டுக்களையும், மகரூப் மற்றும் குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 127 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் இலங்கை அணி களமிறங்கியது. இலங்கை அணியின் ஆரம்ப விக்கெட் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் வீழ்த்தப்பட்டது. தரங்க ஓட்டமெதுவும் பெறாது ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கியவர் சங்கக்கார.

அடுத்து அதிரடியாக விளையாடிய உடவத்த 38 ஓட்டங்களுடன் சிக்கும்புரவின் பந்தில் மற்சிகென்ஜெரியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தனா களமிறங்கினார்.

மஹேலவும் சங்கக்காரவும் இணைந்து அதிரடியாக ஆடினர். அப்போது 12 ஓட்டங்களைப் பெற்றிருந்த மஹேல, ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த கப்புகெதரவும் [16] நின்று நிலைக்கவில்லை.

எனினும் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார் குமார் சங்கக்கார. அவர் ஆட்டமிழக்காமல் 50 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது இலங்கை அணி வெற்றி இலக்கை அடைந்தது.

# அரசு அனுமதித்தால் மட்டுமே பாகிஸ்தான் சுற்றுப் பயணம்

அரசு அனுமதி அளித்தால்தான் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்படும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெளிவுபடுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்வது குறித்த எந்த உறுதிமொழியையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு இந்திய கிரிக்கெட் சபை அளிக்கவில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சஷாங்க் மனோகர் கூறினார்.

அரசிடமிருந்து அனுமதி கிடைத்தால் மட்டுமே சுற்றுப்பயணம் குறித்து இறுதி முடிவு எடுக்கமுடியும். அதற்கு முன் எதுவும் செய்ய முடியாது என்றார்.

அரசிடம் அனுமதி கேட்டு கடிதம் எழுதியுள்ளதாகவும், 10-12 நாள்களில் பதில் கிடைத்துவிடும் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையைச் சேர்ந்த பட்டிடம் சஷாங்க் மனோகர் கூறியதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் ஜனவரி 13 முதல் பெப்ரவரி 19 வரை சுற்றுப்பயணம் செய்ய உள்ள இந்திய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் ஆட்டம், ஒரு ருவென்ரி - 20 ஆட்டத்திலும் பங்கேற்க உள்ளது.

ஆனால், பாகிஸ்தான் செல்ல இந்திய அணிக்கு அரசின் அனுமதி கிடைக்குமா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

# நியூஸிலாந்திடம் தடுமாறுகிறது ஆஸி. சைமண்ட்ஸ் வந்தும் பலனேதுமில்லை!

அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் முதலாவது டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேரினில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியை முதலில் துடுப்பெடுத்தாடும்படி பணித்தது.

இதன்படி அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களாக மத்தியூ ஹைடன், சைமன் கடிச் ஆகியோர் களமிறங்கினர்.

அணியின் ஓட்ட எண்ணிக்கை 13 ஆக இருக்கும் போது அதன் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது. 8 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஹைடன், சௌதியின் பந்துவீச்சில் ரெய்லரிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

அடுத்து அணித்தலைவர் பொண்டிங் களம்புகுந்தார். இந்நிலையில் 10 ஓட்டங்களைப் பெற்றிருந்த சைமன் கடிச் சௌதியின் பந்தில் மக்கலத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அப்போது அணியின் ஓட்ட எண்ணிக்கை 22 ஆக இருந்தது.

அவரைத் தொடர்ந்து பொண்டிங்குடன் இணைந்துகொண்டவர் மைக் ஹஸி. ஆயினும் மேலதிகமாக 1 ஓட்டத்தைப்பெற்றிருந்தபோது, அணித் தலைவர் பொண்டிங் 4 ஓட்டங்களுடன் சௌதியின் பந்தில் கௌப்பிடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

மறுமுனையில் இருந்த மைக் ஹஸியுடன் கூட்டுச் சேர்ந்தவர் மைக்கல் கிளார்க். இந்த இணை ஓரளவு நிலைத்தது. இவர்கள் இருவரும் 73 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில் 35 ஓட்டங்களுடன் மார்டினின் பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் வெளியேறினார் மைக் ஹஸி.

பின்னர் வந்தவர் சைமண்ட்ஸ். இவரும் 26 ஓட்டங்களைப் பெற்று பிறையனின் பந்துவீச்சில் மக்கலத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து வட்சன் களமிறங்கினார். அவரை 1 ஓட்டத்துடன் வெளியேற்றினார் பிறையன். பிறையனின் பந்தில் மக்கலத்திடம் பிடிகொடுத்து பெவிலியன் திரும்பினார்.

தொடர்ந்து மைக்கல் கிளார்க்குடன் ஹடின் இணைந்துகொண்டார். இவரும் 6 ஓட்டங்களுடன் ரைடரின் பந்தில் கௌப்பிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அவரின் பின்னர் பிரெட் லீ வந்தார். அவரும் 4 ஓட்டங்களுடன் சௌதியின் பந்தில் மக்கலத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த ஜோண்சன் 5 ஓட்டங்களுடன் விற்றோரியின் பந்தில் ரெய்லரிடம் பிடிகொடுத்து திரும்பினார். இறுதியாக ஸ்ருவேர்ட் கிளார்க் களமிறங்கினார்.

எனினும் மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிக்கொண்டிருந்த மைக்கல் கிளார்க் 98 ஓட்டங்களுடன் தனது சதத்தை தவறவிட்டு ரைடரின் பந்தில் போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அத்தோடு அவுஸ்திரேலிய அணியின் முதலாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. அப்போது அவுஸ்திரேலிய அணி 214 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஸ்ருவேர்ட் கிளார்க் 13 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

பந்துவீச்சில் மிகச் சிறப்பாகப் பந்துவீசிய சௌதி 4 விக்கெட்டுக்களையும், பிறையன், ரைடர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், விற்றோரி, மார்ட்டின் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி நேற்றைய முதலாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரெட்மண் 3 ஓட்டங்களுடனும், கௌ 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.




# மீண்டும் வீழ்ந்தது இங்கிலாந்து; 16 ஓட்டங்களால் இந்தியா வெற்றி!

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 3ஆவது ஒருநாள் போட்டி கான்பூரில் நேற்று நடைபெற்றது. மூடுபனி காரணமாக ஆட்டம் தாமதமாகவே ஆரம்பமானது. இதனால் ஆட்டம் 49 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

ஆட்டம் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டது. இதன்படி டக்வோத் லூயிஸ் முறைப்படி இந்திய அணி 16 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணியின் தலைவர் பீற்றர்சன் முதலில் துடுப்பெடுத்தாடும் சந்தர்ப்பத்தை தனது அணிக்கு வழங்கினார்.

இங்கிலாந்து அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக போபரா 60 ஓட்டங்களையும், இயன் பெல் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன்சிங் 3 விக்கெட்டுக்களையும், முனாப் பட்டேல், இசாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், சகீர்கான், யுவராஜ்சிங், யூசுப் பதான் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

241 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கியது இந்திய அணி. இதன் ஆரம்ப வீரர்களாக கௌதம் கம்பீர், விரேந்தர் ஷேவாக் ஆகியோர் களமிறங்கினர்.

5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு இந்திய அணி 198 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இந்திய அணி சார்பாக அதிக பட்சமாக விரேந்தர் ஷேவாக் 68 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக பிளின்ரொப் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஆட்டநாயகனாக இந்திய அணியின் ஹர்பஜன்சிங் தெரிவு செய்யப்பட்டார்.

# கங்குலிக்குப் புதிய பதவி



கொல்கொத்தா, நவ. 21

கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற இந்திய அணியின் தலைவர் சௌரவ் கங்குலிக்கு கிரிக்கெட் சபையில் புதிய பதவி அளிக்கப்பட்டுள்ளது. அவர் தொழில்நுட்பக் குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி, அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரோடு கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுகிறார் என அறிவித்தார்.

ஓய்வு பெற்ற பிறகு என்ன செய்வது என்பது பற்றி இன்னமும் முடிவு செய்யவில்லை என்று கங்குலி கூறியிருந்தார். அவர் வர்ணனையாளராக மாறலாம் என்று கருதப்பட்டது. இந்நிலையில் கங்குலிக்கு கிரிக்கெட் சபையில் பதவி அளிக்கப்பட்டுள்ளது.

சுனில் கவாஸ்கர் தலைமையிலான தொழில்நுட்பக் குழுவில் அவர் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தக் குழுவில் முன்னாள் வீரர் சவுகான் மற்றும் தேர்வு குழுத் தலைவர் ஸ்ரீகாந்த் ஆகியோர் உள்ளனர். இந்தக்குழுவில் முன்னாள் டெஸ்ட் வீரருக்கான ஓர் இடம் காலியாக இருந்ததாகவும், அந்த இடம் கங்குலிக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் கிரிக்கெட் சபை அதிகாரி ரத்னாகர் ஷெட்டி கூறியுள்ளார்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இயக்குநராக முன்னாள் வீரர்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் இயக்குநர் ஜெனரலாக முன்னாள் தலைவர் ஜாவீத் மியாண்தாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

மியாண்தாத் இந்தப் பொறுப்பை உடனடியாக ஏற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கலைக்கப்பட்டு அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன் புதிய தலைவராக இஜாஸ்பட் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில் இயக்குநர் ஜெனரலாக முன்னாள் தலைவர் மியாண்தாத் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளராக பொறுப்பேற்கும்படி இஜாஸ்பட் இவரைக் கேட்டு கொண்டார் எனவும், ஆனால் அதனை மியாண்தாத் மறுத்து விட்டார் எனவும் கூறப்படுகிறது.

எனினும் வேறு பதவி ஏற்க தாம் தயாராக இருக்கிறார் எனக் கூறியிருக்கிறார். அதனையடுத்து அவர் இயக்குநர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை மாவின் விலை 5 ரூபாவாலும் லக்ஸ்பிறேயின் விலை 10 ரூபாவாலும் குறைப்பு

## ப.நோ.கூ.சங்கங்களுக்கு சீனி வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், நவ.21

குடாநாட்டில் கோதுமை மாவின் விலை எதிர் வரும் திங்கட்கிழமை தொடக்கம் 5 ரூபாவாலும் லக்ஸ்பிறே பால் மாவின் விலை உடனடியாக 10 ரூபா வாலும் குறைக் கப்படுவதாக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

புதிய விலைகளின் பிரகாரம் -

கோதுமை மாவின் விலை ஒரு கிலோ 80 ரூபாவில் இருந்து 75 ரூபாவாகவும்-

லக்ஸ்பிறே பால்மா ஒரு பைக்கெற் 262 ரூபாவில் இருந்து 252 ரூபாவாகவும் - விலை நிர்ணயம் செய் யப்பட்டுள்ளது என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

சிவப்பு நாட்டு அரிசி 90 ரூபாவாகவும், பருப்பு 140 ரூபாவாகவும், அங்கர் பால்மா 280 ரூபாவாகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

ப.நோ.கூ. சங்கங்களின் விநியோகத்துக்கு தேவை யான அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு, பால்மா ஆகியவற்றை விநியோகிப்பதற்கு உரிய நடவடிக்கை கள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள் ளன. எனவே மேற்குறிப்பிட்ட பொருள்கள் எதனை யும் ப.நோ.கூ.சங்கங்கள் தனியார் நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டாம் என அரசாங்க அதிபர் ப.நோ.கூ.சங்கங்களை கேட்டுள்ளார்.

லக்ஸ்பிறே, அங்கர் பால்மா பைக்கெற்றுக்கள் போதிய அளவு கையிருப்பில் இருப்பதனால் தனியார் வியாபாரிகளும் மாவட்ட செயலகத்தில் நேரடியாக வழங்கல் கட்டளைகளை பெற்று பால்மா வகை களை கொள்வனவு செய்யமுடியும்.

ப.நோ.கூ.சங்கங்களின் விநியோகத்துக்கு தேவை யான 1000 மெற்றிக்தொன் சீனி, அத்தியாவாசிய சேவை ஆணையாளரால் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான விநி யோகம் அடுத்தவாரத்தில் மேற்கொள்ளப்படும் என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார். (1)

## லண்டனிலிருந்து திரும்பிய சண்டிலிப்பாய் வாசி வெள்ளவத்தையில் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், நவ.21

லண்டனில் இருந்து கொழும்பு வந்திருந்த சண்டி லிப்பாயைச் சேர்ந்த ஒருவர் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டுள்ளார் என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய், சீரணியைச் சேர்ந்த சற்குணராஜா தர்மேந்திரன் என்பவரே வெள்ளவத்தையில் வைத்து கடத்தப்பட்டார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவரது சிறிய தந்தை இந்த முறைப்பாட்டை நேற்று ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ளார். (அ-1-25)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிமுத்து ஆனந்தராசா

(இளைப்பாறிய மின் அத்தியட்சர்)



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் டச்சு றோட், பெரியாவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து ஆனந்தராசா 20.11.2008 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பி முத்து- சோதிமுத்து தம்பதியரின் அன்பு மக னும் காலஞ்சென்றவர்களான சிவகுரு -அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் ஜெயக்கணேசன் (SOCIAL INDICATOR மற்றும் யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய கற்கைநெறி மாணவன், மருதனார்மடம்), கணேஸ்வரன் (பொறியியலாளர், ரெலிகொம், கொழும்பு), பாலவிநாயகன் (G.A.Q) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர் களான வேலாயுதபிள்ளை(உணவுக் களஞ்சியப் பொறுப் பாளர்), யோகேஸ்வரி, சோமசுந்தரம், இராஜேஸ்வரி, கிருஸ்ண ராசா மற்றும் குலசேகரம்பிள்ளை(கணக்காளர்), வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரைராசா, காலஞ்சென்ற வர்களான நடராசா, முத்துராசா மற்றும் தம்பிராசா, இராசரத் தினம், தவமணி, செல்வராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2008)வெள்ளிக் கிழமை 4.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பெரியவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

*டச்சு வீதி, பெரியவிளான்,*
*0773922783*
*0775142016* (80067)

### வஸ்தியாம்பிள்ளை அன்ரனி (பெனடிற்)



யாழ்ப்பாணம், நாரந்தனையைப் பிறப்பிட மாகவும் அரியாலை, புங்கன்குளம் வீதியை வதிவிடமாகவும், பிரித்தானியாவில் வசித்த வரு மாகிய வஸ்தியாம்பிள்ளை அன்ரனி அவர்கள் 17.11.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வஸ்தி யாம்பிள்ளை- மேரி தம்பதியினரின் அன்பு இளைய மகனும், காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை- அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், மேரிதிரேசா (பவளராணி, லண்டன்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்கள்ான இரா ஜரட்ணம், றோஸ்மலர் மற்றும் இராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்), யேசுதாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராஜன்(லண்டன்), விஜயன்(மொன்றியால்), லதா (மொன்றியால்), டக்ளஸ் (மொன் றியால்), கென்ரா(மொன்றியால்), சுதா (லண்டன்), மோகன் (லண்டன்), சதா(லண்டன்), சுதா (மொன் றியால்), றொபின் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சறோ (லண்டன்), ராணி(மொன்றியால்), அன்ரன் (மொன்றியால்) வெனிசியா (மொன்றியால்), சர்மினி(மொன்றியால்), மனோ(இந்தியா), சாமினி(லண்டன்), சந்திரன்(லண்டன்), பாஸ்கரன் (மொன் றியால்), விபூசிகா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்ரன்(லண்டன்), அன்னரத்தினம் (புதுக் குடியிருப்பு), அல் பிரட்(புதுக்குடியிருப்பு), பேபி(திருகோண மலை) ஆகியோ ரின் மைத்துனரும் கமல்ராஜ், விமல்ராஜ், அருன் ராஜ், மேரிஜெனிபர், அல்வின், அருன், அஸ்வின், துவாரகா, நவீன், பவாணா, வாணி, ராஜா, வீமா, ஜேசிக்கா, பிரிட்டிகா, பவித்திரா, கவிராஜ், சுமித்திரா, அர்சினி, இமையாளன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.11.2008) சனிக்கிழமை லண்டனில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் டக்ளஸ் (514) 744 1036, மகன் கென்ரா (514) 670 6597,
மகள் சுதா பாஸ்கரன் (514) 747 2368,
*லண்டன்.* மகன் மோகன் 011442089978525, மனைவி 01144208903260,
(8066) மகன் விஜயன் (514) 382 2041, மகள் லதா(514) 748 2756

## நியமனம் பெறும் பட்டதாரிகளுக்கு

யாழ்ப்பாணம், நவ.21

நியமனம் பெறவுள்ள பட்டதாரிகளின் நியமனக் கடிதம் பெற்றுக்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். வலய அலுவலகம் முன் இடம்பெறவுள்ளது என்று நியமனம் பெறவுள்ள பட்டதாரிகளின் செயற்குழு தெரிவித்துள்ளது.

விவரங்களுடன் சமுகமளிக்குமாறு செயற்குழு கேட்டுள்ளது. (1)

## தமிழ்த்தினவிழா

யாழ்ப்பாணம், நவ.21

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை யின் தமிழ்த்தின விழா நாளை சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்வார். (1)

## உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்க ளின் பட்ட நிறைவு விழா தொடர்பான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறும் என கல்லூரி யின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் தவறாதுகலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

## சத்யஜித் ரேயின் சாருலதா திரைப்படம்

யாழ்ப்பாணம், நவ.21

யாழ்பாணப் பல்கலைக்கழகப் புற நிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கல்விசார்/ கலைத்து வம் சார் படக்காட்சித் தொடரில் காட்சிப் படுத்தப்படுகின்ற, உலகின் தலைசிறந்த இந்தியநெறியாளரான சத்யஜித் ரேயின் ஆறு திரைப்படங்களின் வரிசையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அவரின் சாருலதா (1964) திரைப்படம் அரசறிவியல் விரிவுரை மண் டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனை வரும் வருகை தந்து பயன்பெற முடியு மென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## தவறிவிட்டது

தாவளை, இயற்றாலை என்னும் முகவரியுடைய பரிமளா ஸ்ரீகாந்தன் என்பவரது ஆள்அடையாள அட்டை (768295050V) 'ஹான் பாக்'குடன் (கறுப்பு) தவறிவிட்டது. (கடந்த 12.11.2008 புதன் கிழமை, பருத்தித்துறை சிற்றூர்தியில், யாழ்நகருக்கு அண்மையில்) கண்டெடுத்தவர்கள் "சிம்பனை, கோப்பாய் வடக்கு, கோப்பாய்" என்னும் முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (80059)

## கண்ணீர் அஞ்சலி



ராஜா கிறீம் ஹவுஸ்.

சிங்கப்பூர் போசனசாலை
உரிமையாளரான
**செல்லையா கனகலிங்கம்**
அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைவதோடு, துயருற்றிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும். (80054)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஸ்தாபன முகாமையாளர்
திரு N.பிரகாஸ் அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர் **மாணிக்கவாசகர் நவரத்தினம்**
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றி ருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்திய டைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*யாழ்ப்பாண மின்னகம்(அபான்ஸ்)*
*இல:- 141, மின்சார நிலைய வீதி,*
*இல:- 94(6) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*

பிரிவால் துயருறும்
உரிமையாளரும்,
ஊழியரும். (80054)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கவாசகர் நவரத்தினம் (மார்க்கண்டு)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் நவரத் தனம் அவர்கள் நேற்று (20.11.2008) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் அமரர் மாணிக்கவாசகர் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும் இராசரத்தினம் - திலகவதி தம்பதியரின் அன்பு மருமகனும் தயாநிதிதேவியின் அன்புக் கணவரும் பிரகாஷ் (யாழ். மின்னகம்-அபான்ஸ்), பிரதீபன், நளினி, பிரசன்னா, லக்ஸ்மன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மகுமாரின் (பிரான்ஸ்) மாமனாரும் நித்தியானந்தன், சிவானந்தன்(ரவி), செல்வரதி, செல்வவதனா ஆகியோரின் அன்புச் சகோதரரும் வசந்தகுமாரி(களவாவோடை அம்மன், ஏழாலை), திருஞானே ஸ்வரி, ரவீந்திரகுமார், விக்னேஸ்வரன், நிர்பாகரன் - தயாநிதி, தர்சினி - சிவகுமார், ஜெயந்தி - கதிர்காமநாதன் ஆகியோரின் மைத்துனரும் இராசரத்தினம்(சேனா), அமரர் சபாரத்தினம், அமரர் சீவரத்தினம், அழகரத்தினம், விஜயரத்தினம், ஆகியோரின் மருமகனும் கனகலிங்கம் - நவமணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.11.2008)வெள் ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக/இணுவில் காரைக் கால் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.பிரகாஷ் (மகன்),
யாழ்.மின்னகம் (அபான்ஸ்).

*காங்கேசன்துறை வீதி,*
*இணுவில் சந்தி, இணுவில்.* (80062)

### திருமதி மேரி ஸ்ரெலா சிலுவைராயா



யாழ்.டேவிற் வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி ஸ்ரெலா சிலுவைராயா நேற்று (20.11.2008) லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சத்திய நாதன் -அந்தோனியாப்பிள்ளை தம்தியினரின் அன்பு மகளும் திரு.திருமதி சிலுவைராசா வின் அன்பு மருமகளும், ஐடா, ராஜேஸ், ரவி, சைலா, யஸ்ரின், தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நிகிலா, மகிலா ஆகியோரின் தாயாரும், மரியதாஸ்,-மாலினி, கியூறி, தேவராயன், சாந்தி, பாபு(தேவி ஜுவலர்ஸ், வவுனியா), ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (22.11.2008) சனிக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மரியதாஸ்(மைத்துனர்).

*162, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.* (80063)

### சிவசம்பு பாலகிருஷ்ணன்

(நிர்வாக உத்தியோத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)



2 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறையைச் சேர்ந்த சிவசம்பு பாலகிருஷ்ணன் 19.11.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சாந்தினி (தாதியர்), சுகந்தி(மக்கள் வங்கி உத்தி யோகத்தர், வல்வெட்டித்துறை), சுதாகர், காலஞ்சென்ற தயந்தி (ஆசிரியை), சேகர், காலஞ்சென்ற பாஸ்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா), வினோதினி - சுதாகர், றோகினி - சேகர் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள் நேற்று(20.11.2008) வியாழக் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.சுகந்தி(மகள்).

*2 ஆம் குறுக்குத் தெரு,*
*பருத்தித்துறை.* (சி-555399)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியிலிருந்து நகர்ந்தமை புலிகளின் தந்திரோபாயமா?

## அப்படி ஒன்றும் கிடையாது என்கிறது அரசு

கொழும்பு, நவ. 21

புலிகள் பூநகரியில் இருந்து பின்வாங்கியமை ஒரு தந்திரோபாயமான பின்நகர்வு அல்ல என்றும் அவர்கள் படையினரால் உண்மையாகத் தோற்கடிக்கப்பட்டே பின்வாங்கச் செய்யப்பட்டனர் என்றும் அரசு நேற்று தெரிவித்தது.

நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவே இதனைக் கூறினார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

பூநகரி பிரதேசம் புலிகளின் கோட்டையாக இருந்து வந்தது. இங்கிருந்தே அவர்கள் படையினரின் முகாம்கள் மீது பல தாக்குதல்களை நடத்தினர்.

அத்தகைய ஒரு பிரதேசத்தை எமது படையினர் இப்போது கைப்பற்றியுள்ளனர். ஆனால், புலிகள் அங்கிருந்து பின்வாங்கியமை ஒரு தந்திரோபாய பின்நகர்வு என்று சொல்லப்படுகிறது. அதை ஏற்க முடியாது.

எமது படையினரின் கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாததனாலேயே புலிகள் பின்வாங்கினர். இது அவர்களுக்கு விழுந்த பாரிய அடியாகும்.

பூநகரியை கைப்பற்றியதன் மூலம் ஏ - 32 பாதையைச் திறக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்துள்ளது.

புலிகளின் இந்தத் தோல்வியைத் தாங்கிக் கொள்ள முடியாத சிலர் இத்தோல்வியை ஒரு தந்திரோபாய பின்நகர்வாகக் காட்ட முற்படுகின்றனர்.

எமது படையினர் மிகவும் பலமான நிலையில் உள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் போரிட்டு வருகின்றனர். வெற்றிகளைத் குவிக்கின்றனர். இந்த வெற்றிகளைத் தடுத்து நிறுத்த எவராலும் முடியாது- என்றார்.(அ-சி)

### திருவாரூர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த அவர் விமானம் முலம் திருச்சி சென்றார். அங்கிருந்து திருவாரூர் சனீஸ்வர பகவான் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டார். பின்னர் காரில் திரும்பிக் கொண்டிருந்தார். அவரது காருக்கு முன்னும் பின்னும் ஏராளமான பொலிஸ் வாகனங்கள் சென்றன.

இந்த வாகன அணிவகுப்பு திருவாரூர் வந்தபோது திருக்கொல்லிக்காடு என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் கறுப்புக் கொடிகளுடன் வழிமறித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்க பொலிஸாரால் முடியவில்லை. இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

இதையடுத்து, கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். இவர்கள் விரைந்து வந்து 30 நிமிடங்கள் போராடி கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்களை அப்புறப்படுத்தீரணிலின் கார் செல்ல வழி ஏற்படுத்தினர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக 49 கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்களையும் அந்தக் கட்சியின் பஞ்சாயத்துத் தலைவர் பாண்டியனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. (அ-சி)

### முதலாம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அரசின் போக்கையே மாற்ற மடையச் செய்யும் அளவுக்கு இந்த மாநாட்டில் பெருந்திரளான தமிழக மக்கள் அணி திரள வேண்டும் என்று அக்கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் இளைஞர் பிரிவான 'இளஞ்சிறுத்தைகள் எழுச்சிப் பாசறை' என்னும் புதியதோர் அமைப்பின் தொடக்கவிழா, தமிழீழ அங்கீகார மாநாடு ஆகிய 2 நிகழ்ச்சிகளும் எதிர்வரும் 26 ஆம் திகதி மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

எனினும், தவிர்க்கமுடியாத காரணங்களால், இந்த நிகழ்வுகளை டிசம்பர் முதலாம் திகதி சென்னை தீவுத்திடலில் நடத்துவதெனத்தீர் மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இயக்கத் தோழர்களும், முன்னணி செயல் வீரர்களும், பொதுமக்களும் சென்னைக்கு அணிதிரண்டுவரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறது. - என்று திருமாளவன் கூறினார். (அ-சி)


விக்னா
கல்வி நிறுவனம்
தலைமை நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி.யாழ்
கணக்கீடு
திரு P.பகீரதன்
A/L 2010
PAPERS CLASS
அறவிடமுடியாத கடன்
Sat/Sun-10-11
தொங்கல் கணக்கீடு
Sat/Sun-11-12
ஆரம்பம்:- 22.11.08(Sat)
மீளவிவரியில் A/L Day Class
கலை வர்த்தக வகுப்புகள்.



தேர்தல் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை வகுப்புகள்
இன்று (வெள்ளி) நாளை சனி } 9 மணி - 2மணி வரை
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புப் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)



NAFISA SPOKEN ENGLISH
Nafisa Spoken English- VCD+ACD
Day by Day Spoken English- Tick- Soft- VCD/DVD/CR- ROM
GO GO'S சிறுவர்களுக்கான Learning English- VCD
பின்வரும் புத்தக நிலையங்களில் பெறலாம்
பூபாலசிங்கம்- யாழ்.,அன்னை- யாழ்., ஆல் சிலோன்-யாழ்.


### கப்பல் சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று போக்குவரத்து நிறுவனம் தெரிவித் துள்ளது.

கப்பல் சேவை எப்போது மீண்டும் ஆரம்பமாகும் என அறிவிக்கப்படவில்லை.

யாழ் - திருமலை கப்பல் சேவை கடைசியாக நேற்று முன்தினம் புதன்கிழமை நடை பெற்றது. (அ-1)

### அடுத்த மாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2016 ஆம் ஆண்டளவில் நாட்டில் உள்ள 96 வீதமான வீடுகளுக்கு மின்சாரம் வழங்கக்கூடியதாகவிருக்கும்.

ஐ.தே.கட்சியால் ஆரம்பிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின்திட்டத்தை நாம் இப்போது நடைமுறைப்படுத்துகிறோம்.

அவர்களால் இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதமையால் எம்மீது பழிபோடுகின்றனர்.

தற்போது மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டதால் மக்களின் மின் பாவனை குறைந்துள்ளது. மக்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். இதையே நாம் விரும்புகிறோம்.

புலிகள் மின் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தியபோதும் நாம் மின்சாரத்தை வெட்டி மக்களை இருட்டில் போடவில்லை.

வடக்கு - கிழக்கில் மின்தேவையைப் பூர்த்திசெய்ய நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இரண்டு வருடங்களுக்குள் திருமலையில் இரண்டு அனல்மின் நிலையங்கள் அமைக்கப்படும். யாழ். சுன்னாகத்தில் 30 மெகாவோற் மின்சாரத்தை உற்பத்திசெய்யக்கூடிய மின்நிலையம் ஒன்று அடுத்த மாதம் அமைக்கப்படும்.

இதன் மூலம் அடுத்தமாதம் முதல் யாழில் 24 மணி நேர மின்சாரம் வழங்கப்படும் - என்றார். (அ-சி)


புதிய வகுப்புகள் ஆரம்பம்.
2009 கல்வி ஆண்டிற்கான
தரம்:4முதல் O/Lவரை
GRADE:6,7 - ENGLISH MEDIUM
1) நீங்கள் எதிர்பார்க்கும் ஆசிரியர் குழு.
2)மாதாந்தப்பரீட்சை 3)கணிப்பீட்டறிக்கை
4)பெற்றோர் சந்திப்பு 5)வினாவிடைவகுப்பு
இத்தனையும் ஒரே இடத்தில், சரியான வழிகாட்டலில்
புதிய அனுமதிகள் 30.11.2008 வரை
சயன்ஸ்அக்கடமி
நல்லூர். முருகன் ஆலயம் முன்பாக.
அரியாலை.302. நாவலர் வீதி.

GRADE: 6,7 -ENGLISHMEDIUM
2009 கல்வி ஆண்டிற்காக..
முற்றிலும் புதிய முறையில் அனுபவம் மிக்க ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில் மாதாந்தப் பரீட்சைகளோடு
முதலாவது பரீட்சைவரை கட்டணம் இலவசம்!!
தரம்:5 புலமைப்பரிசில் வகுப்பு
வெற்றிக்கேற்றதிருமலை கணேசலிங்கம் அவர்களின்
மாவட்ட ரீதியிலான தொடர் சைமோ
அகில இலங்கையில் சாதனை படைத்த
ஆசிரியரின் சிறப்பான வழிகாட்டலில்!


சயன்ஸ்அக்கடமி
நல்லூர். முருகன் ஆலயம் முன்பாக.


### கைதிகள் விடுதலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், பிரதித்தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் ஆகியோரே சட்டமா அதிபர் ரி.ஆர்.டி.சில்வாவை சந்தித்து கலந்துரையாடினர்.

கைதிகளை அவர்களின் சொந்த மாவட்டங்களுக்கு ஆனுப்பி அந்தந்த மாவட்ட நீதிமன்றங்களின் ஊடாக விசாரணைகளை நடத்தி துரிதமாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சில கைதிகள் ஐந்து வருடங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் கூட ஆரம்பிக்கப்படவில்லை என்றும் வேறு சில கைதிகளுக்கு பத்து வருடங்களாக நீதிமன்ற விசாரணைகள் இடம் பெறுவதாகவும் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ள னர்.

இதற்கு பதிலளித்த சட்டமா அதிபர் ரி.ஆர்.டி.சில்வா, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்தாக கூட்டமைப்பு உறுப்பினர்கள் தெரிவித்தனர். (அ-1)

### முகமாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகமாலை மற்றும் கிளாலியிலுள்ள தமது முக்கியமான நிலைகளைப் பாதுகாப்பதற்கு விடுதலைப்புலிகள் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தினர். கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எனினும் படையினர் தந்திரோபாய ரீதியில் முன்னகர்ந்ததால் துருப்புகளின் உயிரிழப்புகளைக் குறைக்க முடிந்தது. இம் மோதல்களில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 30 இராணுவத்தினர் காயமடைந்தனர் ''என்று பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்தது. (அ-சி)

### வன்னி அகதிகளு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தால்பாதிக்கப்பட்ட மக்களுக்கானதே இந்த உதவி எனத் தெரிவித்த அவர், பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமானத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இது உதவும் என நம்பிக்கையும் வெளியிட்டார்.

இந்திய நிவாரண உதவிகளில் உணவு, உடைகள் மற்றும் மருந்துப் பொதிகள் அடங்கியுள்ளன. இலகுவாக விநியோகிப்பதற்கும் குறிப்பிட்ட நபர்களுக்கு இவை நேரடியாகச் செல்வதற்கும் 80 ஆயிரம் தனித்தனி பொதிகளாகக் கட்டப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது என புதுடில்லியும் கொழும்பும் தீர்மானித்து மூன்று வாரங்களுக்குள் குறிப்பிடத்தக்க உதவிப் பொருள்கள் கொழும்பை வந்தடைந்துள்ளமை குறித்து அலோக் பிரசாத் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

''இந்தியா மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் அர்ப்பணிப்புடன் உள்ளது. நிலைமையை மதிப்பீடு செய்து என்ன தேவை என ஆராய்ந்து எதிர்காலத்திலும் இந்தியா மேலதிக நிவாரணப் பொருள்களை வழங்கும்'' என அவர் தெரிவித்துள்ளார்.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

### ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இணுவில்), நடராசா நர்மதன் (வயது 19- சுன்னாகம்), சிவானந்தன் ஸ்ரீகாந்தன் (வயது - 30 - கொக்குவில்), சிவசுப்பிர மணியம் தர்மேந்திரா (வயது - 26 - திருநெல்வேலி) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

### புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போது ஊடகத்துறை அமைச்சர் பிரியதர்சன யாப்பா மேலும் கூறியவை வருமாறு:-

புலிகள் தங்களது பயங்கரவாதச் செயற்பாட்டை நிறுத்தி ஆயுதங்களை கீழே வைத்து விட்டு பேச்சுக்கு வரவேண்டும் என்று ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

சமாதானத்தின் மீதுள்ள பற்றுக் காரணமாகவே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளார். இதை ஏற்காமல் புலிகள் தொடர்ந்து பயங்கரவாதத்தில் ஈடுபட்டால் அவர்களை அழித்தொழிப்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை.

அந்த நடவடிக்கையை நாம் மிகவும் வெற்றிகரமாகச் செய்து வருகிறோம். அதேநேரம் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைப்பதில் நாம் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறோம்.

ஆனால், நாம் புலிகளை அழித்தொழித்து விட்டு தமிழர்களுக்கு அரசியல் தீர்வைக் கொடுக்காமல் விடப்போகிறோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறியுள்ளார்.

அரசிடம் அப்படியானதொரு சதித்திட்டம் கிடையாது. பயங்கரவாதத்தை ஒழித்து தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குவது என்ற நிலைப்பாட்டுடனேயே அரசு செயற்படுகிறது.

மேற்படி இரு நடவடிக்கைகளும் ஏக காலத்தில் சமாந்தரமாகவே இடம்பெறுகின்றன. தமிழர்கள் எமது சகோதரர்கள் அவர்களை நாம் ஏமாற்ற மாட்டோம் - என்றார். (அ-சி)

### யாழ்.ஆஸ்பத்திரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிபுரியும் தென்பகுதியைச் சேர்ந்த டாக்டர்கள் கொழும்பு செல்வதற்கு முடிவு செய்திருந்தனர்.

யாழ்.வைத்திய சாலையில் டாக்டர்களுக்கு பூரணபாதுகாப்பு வழங்கப்படும் என்று பொலிஸ் அதிகாரி உறுதிமொழி வழங்கியுள்ளார். அதனையடுத்து அவர்கள் தமது பணியை தொடர்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை- நேற்றுமுதல் யாழ். போதனா வைத்தியசாலைக்குபொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

படைஅதிகாரிகளும், பொலீஸ் அதிகாரிகளும், யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்ட கலந்துரையாடல் ஒன்றை அடுத்தே பாதுகாப்பு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

யாழ்.வைத்தியசாலைக்கு வருபவர் களின் அடையாள அட்டைகளை சோதனை செய்வர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நோயாளர்களைப் பார்வையிடுவோர் அடையாள அட்டைகளுடன் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-1-86)

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கநாச்சியார் இராமசாமி

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி தங்கநாச்சியார் இராமசாமி 18-11-2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி இராமசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிரவேலு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கனகசபாபதி (செங்குந்தா வீதி), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், சிவசுப்பிரமணியம் இலங்கம்மா, கனகசபாபதி செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், Dr. மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, கார்த்திகேசன் (உதயன் காரியாலயம்), இராஜராஜேஸ்வரி (ஆசிரியை, Lyceum International School), இராஜயோகேஸ்வரி, இராஜஇராஜேஸ்வரன் (ஆசிரியர், St. Thomas Prep. School), இராஜயோகேஸ்வரன், மகேஸ்வரன், இந்திராணி, சிறீகுமார், அஷ்டலக்சுமி (ஆசிரியை, Wesley College), ஆத்மானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.முத்தையா, ஜமீலா, தவலோகநாதன், இந்திரகுமார், அற்புதராணி, வீரலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌரீஸ்வரி, குருபரன், ரகுபரன், கார்த்திகா, ஹர்சனன், அருஷனன், கௌஷிகா, ஹரிணி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் இன்று (21-11-08)வெள்ளிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (22-11-08) சனிக்கிழமை காலை 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து கனத்தை மயானத் தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

73, 37ஆவது ஒழுங்கை,
கொழும்பு - 06.
T.P:2362811

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org